Registered as a 1 V:1:1:1

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

# சஞ்சீவி

**அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி**

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னுகம்.

விலை ரூ 2/-

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆடி மீ 16 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 5 (01-08 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-30

# மக்களின் வழிமறிப்புக் கண்டு இந்திய ராணுவம் திரும்பியது

## பல இடங்களிலும் அதேகதை

யாழ்ப்பாணம் ஆக. 1

வட பகுதியில் உள்ள பல இராணுவ முகாம்களில் நிலை கொண்டிருக்கும் இந்திய இராணுவத்தினர் குடாநாட்டை பார்க்கும் திட்டம் நேற்று கைகூடவில்லை.

அவர்கள் வெளியே வந்த பல இடங்களிலும் மக்கள் நடத்திய வழி மறிப்புப் போராட்டத்தைக் கண்டு திரும்பினர்.

தெல்லிப்பழை, அச்சுவேலி, முள்ளி ஆகிய இடங்களில் இந்திய இராணுவத்தினர் அவ்வாறு திரும்பிச் சென்றனர்.

இந்த இடங்களில் எல்லாம் கூடி இருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள், "தலைவர் பிரபாவை எங்களிடம் ஒப்படையுங்கள்" என்று கோஷம் எழுப்பினர். வேறு பலர் "நாலு வருடங்களாக நாம் செத்துக்கொண்டிருந்த போது என்ன செய்து கொண்டீர்கள்" என ஆக்ரோஷத்துடன் கேட்டனர்.

இந்த மூன்று இடங்களையும்விட, இந்தியத் துருப்புகள் வெளியே வரும் என எதிர்பார்க்கப்பட்ட ஏனைய பல இடங்களிலும் வழிமறிப்புப் போராட்டம் நடத்தினர்.

மக்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த இந்திய இராணுவ அதிகாரிகள் "நாங்கள் உங்கள் நலனைக் கவனிக்கவே வந்திருக்கிறோம் நீங்கள் வீடுகளில் சாந்தி, சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றுடன் வாழ வழி செய்வதே எங்கள் நோக்கம்" என்று தெரிவித்தனர்.

### நகரில்

இந்தியத் துருப்புகள் முகாம்களை விட்டு வெளியேறக் கூடாது எனக் கோரி நேற்று ஆயிரக் கணக்கான மக்கள் நகரின் பிரதான வீதிகளில் வீதித்தடைகளை ஏற்படுத்தினர்.

கோட்டை இராணுவ முகாமில் இருந்தும் இந்தியத் துருப்புகள் வெளியே வருவார்கள் என்று வெளிவந்த செய்தியை அடுத்து பிரதான வீதி, கொட்டடி, நாவாந்துறைப் பகுதியி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் முதல் நாள் உற்சவத்திலேயே 5 தாலிக்கொடிகள் அபேஸ்!

யாழ்ப்பாணம், ஆக. 1

நல்லூர் கந்தசாமி கோவில் கொடியேற்ற உற்சவத்தில் ஐந்து தாலிக்கொடிகள் இனந்தெரியாதோரால களவாடப்பட்டன.

நேற்று ஆரம்பமான இந்த உற்சவத்தின்போது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இதனைச் சாதகமாகப் பாவித்தே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி இருக்கின்றனர். (இ-10)

## நல்லூரில் பக்தர் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஆக. 1

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் கோலாகலமாக ஆரம்பமானது.

கடந்த வருடங்களை விட இவ்வாண்டு பெருந்திரளான பக்தர் திருவிழாக்காண வந்திருந்தனர்.

ஊரடங்கு நேரமாக இருந்தும் பஸ் போக்குவரத்து இல்லாதிருந்தும் பக்தர் வெள்ளம் கோவிலின் உள் வீதிகளையும் வெளி வீதிகளையும் நிறைத்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

நல்லைஆதீனத் தொண்டர் சபையினரும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரும், மாநகர சபை சுகாதார சேவையினரும், நல்லை ஆதீன முதலுதவிச் சேவையினரும் தமது கடமைகளைச் சிறப்பாகக் கடமை உணர்வோடு செய்துவருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக உள் வீதி உலாவுடன்முடிவடைந்த மாலைத் திருவிழா முடிவுற்றது. (அ 161)

## லலித்தை இராஜினுமா செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஆக. 1

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி உடனடியாக இராஜினுமாச் செய்ய வேண்டும்.

—இப்படி நிதி அமைச்சர் ரொனி டிமெல் கேட்டிருக்கின்றார்.

பிரதமர் காந்தி கொழும்பில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு அமைச்சர் லலித் அத்துலத்முதலியே பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிதி அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்திருக்கிறார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் நிதி அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்திருக்கின்றார். (உ-எ)

## மகா நாயக்க தேரர்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஆக 1

தென் இலங்கையில் வன்செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று மல்வத்தை, அஸ்கிரிய மாகநாயக்க தேரர்கள் சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளனர். (இ-எ)

## மின்விநியோகம் பல நகரங்களில் துண்டிப்பு

கொழும்பு, ஆக 1

தென் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்களினுல் பல நகரங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

விநியோகத்தைச் சீர் செய்வதில் இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் இரவு பகலாக ஈடுபட்டுள்ளனர். (இ-எ)

## எம். ஜி, ஆரின் பயணம் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஆக 1

பிரதமர் ராஜீவின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் தமது அமெரிக்க விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

இந்திய – இலங்கை உடன்பாடு வெற்றியளித்ததை முன்னிட்டு 'வெற்றி விழா' ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை சென்னை மரீனு கடற்கரையில் நடைபெறவுள்ளது தெரிந்ததே

இந்தவிழாவில் கலந்து கொள்ளும்படி பிரதமர் ராஜீவ் எம். ஜி ஆரை கேட்டிருக்கிறார். (உ-ஒ)

## ஸ்ரீலங்கா ஹெலியில் இந்திய வீரர்

யாழ்ப்பாணம் ஆக 1

ஸ்ரீ லங்கா ஹெலிக்கொப்டரில் இந்தியத் துருப்புகள்நேற்று பறந்து சென்றனர்.

நேற்று தெல்லிப்பளைப் பகுதியில் வீதி மறியல் போராட்டம் நடத்திய பொதுமக்களை ஸ்ரீலங்கா ஹெலிக்கொப்டரில் வந்த இந்திய துருப்புகள் பார்வையிட்டனர்.

மிகவும் தாழ்வாகப் பறந்து வந்த ஹெலிக்கொப்டரைக் கண்டு மக்கள் பதற்றமடைந்த போதும் அதற்குள் இருந்த இந்திய துருப்புகள் கையசைத்து அவர்களை சமாதானப்படுத்தினர். (இ-10)

## கருத்துக் கலசம் — மயூரா

### நிலையாமை

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம். இந்த அர்த்தமுள்ள பாடல் வரி அனேகமாக எல்லோருக்கும் தெரிந்தது.

மனிதனுடைய வாழ்வு நிலையற்றது என்பதை அது விளக்குகிறது. உலக வாழ்க்கையின் நிலையாமையை அது எடுத்துச் சொல்கிறது.

எமது உடம்பு எவ்வாறு நிலையற்றதோ அதே போன்று வாழ்க்கையும் நிலையற்றது. வாழ்வு நிலையில்லாதது எனும்போது, எமது பந்தம், பாசம், சொத்து சுகம் என்பனவும் நிலையற்றவையே. அதனுல் தான் வாழ்வை ஒரு மாயை என்று சமயங்கள் சொல்கின்றன.

வாழ்க்கை என்பது காலத்தோடு சம்பந்தப்பட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் இந்தப் பூவுலகின் கண்ணே வாழ்கிறோம்

வாழ்க்கையைக் காலமாகக் கொள்வதிலும் தப்பில்லை: இறந்தகாலம் நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலங்களும் அடங்கியது வாழ்க்கை.

நிகழ்காலம் கடந்தகாலமாகி, வருங்காலத்தை எதிர்பார்க்கின்றோம். கடந்துபோன காலத்தை மீளப்பெற இயலாது. அதனுல்தான் காலம் பொன்னுனது என்பர். பருவத்தே பயிர் செய்யவேண்டும் என்பதும் அதனுலேயே.

காலம் நிலையற்றது. இன்று ஒருவனுக்குச் சாதகமாக இருக்கும் காலம் சிலநாளில் பாதகமாகி விடும். நடக்கும் என்பது நடவாது போகலாம். நடவாது என்பது நடந்துவிடலாம்.

கஷ்டத்தில் உழன்றவன் திடீரென சுகத்தில் மிதக்கலாம். வசதியோடு வாழ்ந்தவன் திடீரென ஏழை ஆகலாம்

அரசியலும் அப்படித்தான். இன்று வெற்றி, நாளை தோல்வியாகலாம். இப்போது நன்மையாக இருப்பது நாளை தீமையாக மாறலாம். மாற்றம் ஒரு நாளில் திடீர் எனவும் ஏற்படலாம். ஆகையால் எதையும் நிலையானதாகக் கொள்ளக் கூடாது.

காலம் மாறலாம். செய்யும் வினை மாறலாம். அதற்கான விளைவு மாறலாம். ஆனுல், இலட்சியம் மாறக் கூடாது. இலட்சியப் பற்றுத் தளர கூடாது. மனஉறுதி தேய்ந்து விடக்கூடாது.

இதுவே இன்றைய தமிழ் மக்களுக்குத் தேவை.

### சுபநேரம்

1 08 1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
3.03 முதல் 4.33 வரை
ராகுகாலம்:-
9.03 முதல் 10.33வரை

## இ. காங்கிரஸ் ஏற்றது

புதுடில்லி, ஆக. 1

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக்குழு ஏற்றுக்கொண்டது.

இந்த ஒப்பந்தம், இப்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தும் என்றும் குழு நம்பிக்கை தெரிவித்தது. (இ-எ)

## ஆயுதங்களை ஒப்படைப்பது இனப்படுகொலைக்கு துணைபுரியும்

### சென்னையில் புலிகள் அறிக்கை

புதுடில்லி ஆக. 1

ஆயுதங்களை ஒப்படைப்பது என்பது தமிழ் மக்களின இனப்படுகொலைக்கு துணை புரிவதாக இருக்கும்.

இப்படி நேற்றுச் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்தப் பிரகாரம் தாம் ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதில்லை என்றும் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடக்கு கிழக்கில் நிலை கொண்டுள்ள இந்தியத் துருப்புகள், அங்கு போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா இராணுவம் முற்றுக வெளியேறும்

நீங்கள் பாதுகாப்பாக இருக்கக் கூடியதாக ஸ்ரீலங்கா இராணுவம் குடாநாட்டிலிருந்து முற்ற வெளியேறும் அதற்கான ஏற்பாடுகளை நாம் கவனிப்போம்.

-இப்படி இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த் சிங் உதயன் செய்தியாளரிடம் நேற்றுக் கூறினர். (உ-ஒ-10)

## தங்காலை எம்.பி சுட்டுக்கொலை!

கொழும்பு ஆக. 1

தங்காலை எம்.பி ஜினதாஸவீரசிங்காவை இனந்தெரியாத கோஷ்டி நேற்று சுட்டுக் கொன்றது.

அவரின் மகன் படுகாயமடைந்தார்.

அங்கு லாப்பலஸ என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தனது தேர்தல் தொகுதியில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த திரு. வீரசிங்காவை வழி மறித்த கோஷ்டி ஒன்று அவரைச் சுட்டு விட்டு தலைமறைவாகியது.

தடைசெய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் இக்கொலையைப் புரிந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன

வடமராட்சி, ஆக. 1

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது முகாம்களைச் சுற்றியும் ஏனைய இடங்களிலும் வைத்திருந்த கண்ணிவெடிகள் யாவும் இலங்கை இராணுவத்தினர் மூலமாகவே இந்திய இராணுவத்தினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

இவை அகற்றப்பட்டு வருவதை நேரடியாக முள்ளி, நெல்லியடி போன்ற இராணுவ முகாம்களைச் சுற்றிய இடங்களில் காணக் கூடியதாக உள்ளது. (உ-160)

## பங்களாதேஷ் வரவேற்கிறது

டாக்கா ஆக. 1

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பங்களாதேஷ் அரசாங்கமும் வரவேற்றுள்ளது. (உ-எ)

## இந்தியத் துருப்புக்கள் நேற்றும் இறங்கின

### 6விமானங்கள் 3 ஹெலிகளில்

ஆறு விமானங்களிலும் மூன்று ஹெலிக்கொப்டர்களிலும் இந்திய துருப்புகளும், இந்திய உயரதிகாரிகளும் நேற்று மாலை பலாலிக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், இந்தியப் பத்திரிகையாளர்களும் வந்திறங்கினர்.

சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புகளும் 50க்கும் அதிகமான பத்திரிகையாளர்களுமே நேற்று இங்கு வந்து சேர்ந்தனர். (இ-10)

## விமானங்களில் வந்த ஜீப் வண்டிகள்

இந்திய இராணுவ வாகனங்கள் நேற்று பலாலி இராணுவ முகாமுக்கு இந்தியாவில் இருந்து விமானங்கள் மூலம் கொண்டு வரப்பட்டன.

பாரிய வாகனங்கள் கப்பல்களில் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

இராணுவ உயரதிகாரிகள் பாவிக்கும் ஜீப்புகளே விமானம் மூலம் நேற்றுக் கொண்டு வரப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பகுதிகளில் இந்தியத் துருப்புகள் தமது இந்திய வாகனங்களிலேயே நடமாடுவர். (இ-10)



நேற்று இந்திய இராணுவத்தினர் தெல்லிப்பளைச் சந்திக்கு வந்த சமயம் மக்கள் மறியல் செய்து கோஷம் எழுப்பிய போது எடுக்கப்பட்ட படங்கள். (படம்:- ஜெயம்)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேவை

ஆயிஷா ட்ரேடர்ஸ் பொலிதீன், பிளாஸ்டிக், ரெக்சின், சொப்பிங்பேக் மொத்த சில்லறை வியாபாரிகள் 174 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (1371)

### விற்பனைக்கு

கண்ணதாசன் C. N. அண்ணாத்துரை டாக்டர் உதயமூர்த்தி போன்ருேரின் பல அரிய நூல்கள் தற்போது விற்பனையாகி வருகின்றது. நல்லூர் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1600)

பெண் அல்சேசியன் நாய் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளவும். க. நரேந்திரன் 'ஹரிவாசம்' தாவடி ரேட், மானிப்பாய். மாலை 2 - 4 மணிக்கு இடையில் சந்திக்கவும். (1377)

### வகுப்புகள்

புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். ஆண்டு 4 ஆண்டு 11 வரையுள்ள வகுப்புகளுக்கு சகல பாடங்களும் யாழ் முன்னனி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 6 ஆண்டு 11 வகுப்புகளுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கும் க. பொ. த. பரீட்சைக்கும் விசேட வகுப்புகள் 1-8-87 சனிக்கிழமை ஆரம்பிக்கப்படுகின்றன குறைந்த கட்டணம் நிறைந்த கல்வி. (1372)

### வாடகை

ஸ்ரீதர் தியேட்டருக்கும் யாழ் புகையிரத நிலையத்திற்கும் ஹட்டன் நஷனல் வங்கிக்கும் அண்மையில் யாழ் மாநகர சபையாக இயங்கிவந்த மணியம்ஸ் கட்டிடம் 3500 சதுர அடி மூன்று மாடிக் காரியாலய பாவிப்பிற்கோ அல்லது பொது ஸ்தாபன பாவிப்பிற்கோ வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மணியம்ஸ் ரெக்ஸ் ரைல்ஸ் 16 நவீன சந்தை யாழ்ப்பாணம். (1376)


# புதிய ஒப்பந்த அமுலாக்கத்தில் இந்தியாவுக்கு கடப்பாடு உண்டு

கூட்டுச் செய்தியாளர் மாநாட்டின் ஆரம்பத்தில்:-

ஜனாதிபதி ஜெயவர்த்தனு: இந்திய-இலங்கை உடன்பாடு, இலங்கையில் சமாதானம், ஒழுங்கு சட்டத்தை மீண்டும் நிலைநாட்டும். உடன்பாடு காண உதவிய இந்திய மத்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகிய வற்றுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

பிரதமர் ராஜீவ் காந்தி: இன்று நடைபெற்றது மிகப்பெரிய விஷயம். இதுவழமைக்கு மாறுனதொன்று. இந்த உடன்பாடு சிங்கள-தமிழ் மக்களுக்கு இடையே நிலவி வந்த அவநம்பிக்கையை நீக்கி விட்டது.

ராய்ட்டர்: உடன்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்காவிடின் எப்படி அதனை அமுல் நடத்தப்போகின்றீர்கள்?

ராஜீவ்: கடந்த இரவு புலிகள் தலைவர்களுடன் பேசினேன். அவர்கள் சில பிரச்சினைகளை எழுப்பினர்கள். அவர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டவையாக அப்பிரச்சினைகள் காணப்பட்டன இன்னும் நாம் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கின்றேம். அவர்களும் எம்முடன் சேர்ந்து உடன்பாட்டை அமுல் நடத்த உதவுவார்கள் என்று நம்புகின்றேம்.

கேள்வி: ஒப்பந்தத்துக்குக் கொழும்பு அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு இருக்கின்றது? பிரபாகரனும் எதிர்க்கின்ருர். இந்த நிலையில் எப்படி அது அமுல் நடத்தப்படமுடியும்?

ராஜீவ்: இது இலங்கையின் உள்விவகாரம். திரு. ஜெயவர்த்தனு பதில் அளிப்பார்.

ஜே.ஆர்: வடக்கு கிழக்கு மாகாணசபை உடன்பாடு நகல் தயாராகிவிட்டது.

### பாதுகாப்பு

கேள்வி; 'இலங்கை கேட்டவுடன் இந்தியா இராணுவ, ஆயுத உதவிகளை வழங்கும் என்று உடன்பாட்டில் ஓர் அம்சமாகக் கூறப்பட்டது. இது ஒரு இராணுவ, பாதுகாப்பு உடன்படிக்கை என்பது போல் இருப்பதாகக் கருத்து வெளியிடப்பட்டுள்ளதே

ஜே. ஆர்: உடன்பாட்டைப் படித்த பின்னர் நீர் கேட்பதாக இருப்பின் நீர் கூறுவது சரி.

### மக்கள் ஆணை

கேள்வி: உங்கள் பிரதமர் ஒப்பந்தத்துக்கு எதிரானவராக இருக்கின்ருர். ஒப்பந்தத்தை எப்படி அமுல் நடத்துவீர்கள்?

ஜே.ஆர்: நாடாளுமன்றம் உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்ருல் நாடாளுமன்றத்தையே நான் கலைப்பேன்.

கேள்வி: புதிதாக மக்கள் ஆணையைப் பெறுவீர்களா?

ஜே. ஆர்: நான் ஏன் பெறவேண்டும். நாடாளுமன்றம்தான் மக்கள்

## பத்திரிகையாளர் மாநாட்டில் ஜே. ஆர். --ராஜீவ் கருத்துக்கள்

ஆணையைப் பெறவேண்டும். உங்களுக்கு எமது அரசமைப்பு பற்றி எல்லாம் தெரியாது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் அரசமைப்புக்களிலும் பார்க்க எமது அரசமைப்பு வித்தியாசமானது. நான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி.

கேள்வி: கைச்சாத்திடும் நிகழ்ச்சிக்கு முன்னர் ஒப்பந்தம் பற்றிய விவரங்களை ஏன் ரகசியமாக வைத்திருந்தீர்கள்?

ஜே.ஆர்: இனி ஒப்பந்தம் பற்றி மக்களுக்கு விளக்கம்மளிக்க உள்ளோம். தேர்தலில் ஒப்பந்தத்தை நிராகரிக்கும் அளவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு.

### ஆயுத ஒப்படைப்பு

'இந்து' இணை ஆசிரியர் ராம்:- ஆயுதங்களை ஒப்படைப்பது, அரசுப் படைகளை விலக்கிக் கொள்வது சம்பந்தமான கால எல்லையை நீடிக்கும் எண்ணம் உண்டா?

ஜே. ஆர்:- கால எல்லையைக் கடைப்பிடிக்க எண்ணி உள்ளோம். கால எல்லைக்குள் கருமங்களை நிறைவேற்ற வேண்டும். உண்மையாகச் செயல்பட்டும் முடியாத நிலை ஏற்பட்டால் கால எல்லையை நீடிப்போம்.

கேள்வி:- யுத்த நிறுத்தத்தை உங்கள் இராணுவம் சரிவரக் கடைப்பிடிக்குமா?

ஜே.ஆர்:- நிச்சயம் கடைப் பிடிக்கும்.

கேள்வி:- ஒப்பந்தம் இலங்கை மீது இந்தியாவினுல் திணிக்கப்பட்டது என்று கருதப்படுகின்றது; விமான அத்துமீறலைத் தொடர்ந்து ஒப்பந்தம் வந்துள்ளதே.

ராஜீவ்:- இலங்கை மீது நாம் ஒப்பந்தத்தைத் திணித்ததாக நினைக்கவில்லை. தொடர்ந்து இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுவந்ததன் பலன் தான் இந்த ஒப்பந்தம்.

எம். எக்கநாயக்கா, (தாய்வான் மத்திய செய்தி நிறுவனம்:

எதிர்காலத்தில் சிங்கள பௌத்தர்கள் அகதிகளாக வந்தால் இந்தியாவில் புத்த கயாவில் அவர்களைத் தங்க வைப்பீர்களா?

ராஜீவ்:- அவர்கள் உண்மையான அகதிகளாக இருப்பின் ஏற்றுக் கொள்வோம். அவர்கள் பயங்கரவாதிகளாக இருப்பின் இந்திய—இலங்கை உடன்பாட்டின் கீழ் திருப்பி அனுப்பி வைப்போம்.

### போராளிகள் ஒத்துழைப்பு

கேள்வி: உடன்பாட்டை அமுல் நடத்த பிரபாகரன் ஒத்து வராத பட்சத்தில் அவரை சிறை வைப்பீர்களா?

ராஜீவ்: நேற்றுக்கூட பிரபாகரனுடன் பேசினேன். தீர்வு காணலாம் என்று நான் நினைக்கின்றேன்.

கேள்வி·- பிரபாகரன் மறுப்பின் அவரைச்சிறை வைப்பீர்களா?

ராஜீவ்:- ஆதாரமற்ற கேள்வி.

கேள்வி:- கிழக்கு மாகாணத்தில் ஒரு வருடத்தின் பின் நடத்தப்படவுள்ள சர்வஜன வாக்கெடுப்பு பிரச்சினையாக இருக்கிறதே.

ராஜீவ்;- அது பெரிய பிரச்சினையாக வரும் என்று நான் நினைக்கவில்லை.

கேள்வி: இது வரை நடந்த பேச்சுக்களின் போது திரு. ஜெயவர்த்தனு நிலையற்ற முறையில் ஊசலாட்டக் கொள்கையைக் கையாண்டு வந்தார் என்று குற்றஞ்சாட்டியிருந்தீர்கள். இப்போது...

ராஜீவ் உடன்பாடு காணுவதில் ஜெயவர்த்தனு மிகப்பெரிய துணிச்சலையும் ராஜதந்திரத்தையும் காட்டியிருக்கின்ருர்.

கேள்வி: தற்போது இடம் பெறும் கொழும்பு வன்செயல்களுக்குக் காரணம்......

ஜே. ஆர்: அறியாமை

### ஆவணங்கள்

கேள்வி:- இந்திய இலங்கை உடன்பாடு சம்பந்தமாக இருநாட்டுஉறவுகள் பற்றி வேறு தஸ்தாவேயகளும் பரிமாறப்பட்டனவே.

ஜே. ஆர்: உடன்பாடு, அதன் இணைப்பு, இரண்டு தலைவர்களின் கடிதங்கள் பரிமாறப்பட்டன.

ராஜீவ்; உடன்பாடு அமுல் நடத்தும் விஷயம் பற்றி இருநாட்டு ஆலோசனைக்குழு கூடி அடிக்கடி ஆராயும்.

கேள்வி: நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டால் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விடுமே.

ஜே. ஆர்: ஒப்பந்தம் இருக்கும். புதிய அரசு அதை அமுல் நடத்தும்.

கேள்வி: நான்கு ஆண்டுகளாக பேச்சுக்கள் நடந்து தீர்வுகாண முடியாத நிலையில் இருந்த இனப்பிரச்சினைக்குக் கடந்த சில தினங்களில் திடீர் தீர்வு காணப்பட்டுள்ளதே. விசேடகாரணம் அதற்கு உண்டா?

ஜே.ஆர்: கிரகங்களின் சேர்க்கைதான் காரணம்.

கேள்வி: ஒப்பந்தம் இந்திய ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்வதாக அமைந்துள்ளதே. ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஜே.ஆர்: உடன்பாடு தான் கண்டுள்ளோம்.

கேள்வி: சகல ஆயுதங்களையும் போராளிகள் ஒப்படைத்து விடுவார்களா? அவர்களிடம் உள்ள ஆயுதங்கள் குறித்து Inivertory வைத்து உள்ளீர்களா?

ராஜீவ்: என்னிடம் அப்பட்டியல் இல்லை. திரு. ஜெயவர்த்தனு வைத்திருக்கக் கூடும்.

ஜே.ஆர்: என்னிடமும் இல்லை. கம்பாலா, நாகாலந்து, சிம்பாப்வே உடன்பாடுகளிலும் ஆயுத ஒப்படைத்தல் இடம் பெற்றது. அது போன்று இந்த ஒப்பந்தமும் இடம்பெறும்.

ராஜீவ்: சகல ஆயுதங்களும் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது அமைதி திரும்புவதையே.

கேள்வி; எப்போது நாடாளுமன்றத்தில் உடன்பாட்டைச் சமர்ப்பிக்கப் போகின்றீர்கள்?

ஜே. ஆர்: ஒப்பந்தப்படி இந்தியா தனது பங்கைக் கௌரவித்த பின்னர் நான் நாடாளுமன்றம் செல்வேன்.

கேள்வி: இன்னும் 48 மணி நேரத்தில் ஆயுதம் ஒப்படைத்தல் இடம் பெறவேண்டும்; இதை உத்தரவாதப்படுத்த முடியுமா?

ஜே.ஆர்: பொறுத்து இருந்து பார்ப்போம்.

ராஜீவ்: 48 மணி நேரம் நீண்டகாலம் அல்லவே.

கேள்வி: தமிழ் நாட்டில் உள்ள திவிரவாத முகாம்கள் மூடப்படுமா?

ராஜீவ்: தீவிரவாதப் பயிற்சி முகாம்கள் தமிழ் நாட்டில் இல்லை; அகதி முகாம்கள் தான் உண்டு. உடன்பாட்டின் கீழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

### முஸ்லிம்கள்

கிருஷ்ணமூர்த்தி (தினமலர்): முஸ்லிம்களும் தமிழர்கள். அப்படி இருக்கையில் ஒப்பந்தத்தில் ஏன் தனியாக முஸ்லிம் என்று குறிப்பிடப்பட வேண்டும்.

ஜே.ஆர்: முஸ்லிம் தனி இனம். சோனகர் என்றும் இருக்கின்றனர். அரேபியாவில் இருந்து வந்தவர்களும் உள்ளனர். எப்படி அவர்கள் தமிழ் பேசுபவர்களாக மாறினர் என்பது சரித்திரம்.

கிருஷ்ணமூர்த்தி: சரித்திரத்தின் அடிப்படையில் தானே இந்த உடன்பாடு காணப்பட்டுள்ளது.

ஜே.ஆர்: நிச்சயமாக,

கிருஷ்ணமூர்த்தி: சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியன உத்தியோக மொழிகள். அப்படியானுல் தமிழ் மாணவன் எத்தனை மொழிகளைப் படிக்க வேண்டும்; சிங்கள மாணவன் எத்தனை மொழிகளைப் படிக்க வேண்டும்?

ஜே.ஆர்: இப்பிரச்சினை பற்றி இனித்தான் நாம் படித்துப் பார்க்க வேண்டும்.

கேள்வி: ஒரு வருடத்தின் பின் கிழக்கில் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி கிடைக்காது என்ற அச்சம் தமிழர் அமைப்புக்களில் நிலவுகின்றதே.

ராஜீவ்:- அதுதான் ஜனநாயகம் என்பது. சர்வசன வாக்கெடுப்பு பெரும் பிரச்சினையாக அமையப்போவது இல்லை.

### பாரிய திருப்பம்

வெங்கட்நாராயன்: இந்திய - இலங்கை உடன்பாடு தென்கிழக்கு ஆசியாவிலே ஒரு பெரிய திருப்பம் ஆக அமைந்து உள்ளது. இப்படி ஒரு சமாதான உடன்பாட்டைச் செய்துகொள்ள நீங்கள் இஸ்லாமபாத், பீகிங் ஆகிய நாடுகளுக்கும் செல்வீர்களா?

ராஜீவ்: இது அனுமானத்தில் எழுந்த கேள்வி.

கேள்வி: கூட்டணி எம்பிக்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்ல முடியாது. அதுபற்றி என்ன சொல்கின்றீர்கள்?

ஜே.ஆர்: ஆறுவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் என்ன கூறுகின்றது? பிரிவினையை ஆதரிப்பவர்களுக்கு எதிரானது அது. இப்போது தான் 'ஈழம்' இல்லாமற் போய்விட்டதே. ஒருவரும் ஈழத்துக்கு ஆதரவில்லையே. இனி அவர்கள் நாடாளுமன்றம் வரமுடியுமே.

கேள்வி: 1983 இல் இந்தியா மத்தியஸ்தப் பணியை ஆரம்பித்தது. பங்காளியாக இல்லை.

இப்போது பங்காளியாக, உத்தரவாதம் தருபவராக இந்தியா மாறியுள்ளது. இந்தத் தீவிர மாற்றத்துக்குரிய காரணம் என்ன?

ராஜீவ்: இது புதிதான ஒன்று அல்ல. திரு. ஜெயவர்த்தனு புதுடில்லி வந்து 1985ஜூனில் என்னைச் சந்தித்தார். அப்போதே நான் அவரிடம் சொன்னேன்.

'நாம் ஒரு தீர்மானத்தை எடுப்போம். அதை எவரும் ஏற்காவிட்டாலும் நாம் இருவரும் சேர்ந்து செயல்படுத்துவோம்'—இப்படி நான் ஜெயவர்த்னேயிடம்சொன்னேன்.

ஆகவே இந்தியாவின் நிலைப்பாடு புதிதல்ல.

கேள்வி: இந்தியாவின் அமைதிகாக்கும் படை என்று கூறப்பட்டு இருக்கின்றது. அமைதிப்படை இலங்கையில் நிரந்தரமாக இருக்குமா?

ராஜீவ்: இதுவும் ஆதாரமற்ற கேள்வி. இது இலங்கை அரசு தீர்மானிக்க வேண்டியது.

கேள்வி: அமைதி காக்கும் படை எப்படி அமையும்? எப்போது அனுப்புவீர்கள்?

ராஜீவ்: இலங்கை என்ன கோரிக்கை விடுக்கின்றதோ அதற்கேற்ப இந்தியாவின் உதவி அமையும்.

கேள்வி: அதிகாரப் பரவலாக்கல் பற்றி இரண்டு அரசாங்கங்களும் பேசித் தீர்க்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்படிக் காணப்படும் தீர்வு தமிழ் அமைப்புக்கள் மீது திணிக்கப்படுமா?

ஜே.ஆர்: அதிகாரப் பரவலாக்கல் பற்றித் திம்பு, பெங்களூர், கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற பேச்சுக்களில் இடம் பெற்றன.

ராஜீவ்: அதிகாரப்பரவலாக்கல் பற்றிய பல ஷரத்துக்கள் பூர்த்தியாக்கப்பட்டு விட்டன. கொஞ்சம்தான் பேச வேண்டியுள்ளது.

கேள்வி: உணவு நிவாரணக் கப்பல் தொடர்ந்து அனுப்பபபடுமா?

ராஜீவ்: இனித்தேவை இல்லை என்று நினைக்கின்றேன். கடைசிக் கப்பல் ஆகஸ்ட் நான்காம் திகதி வருகின்றது.

### சர்வஜன வாக்கெடுப்பு

கேள்வி: வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய சர்வசனவாக்கெடுப்பில் இணைப்புக்கு எதிராக ஆதரவு தேடுவீர்களா?

ஜே. ஆர்: எதிராகத் தான் ஆதரவு தேடுவேன்.

கேள்வி: முன்னர் இணைப்பு கூடாது என்று தெரிவித்தீர்கள். இப்போது நல்லது என்று நினைக்கின்றீர்களா?

ஜே.ஆர்: இப்போதும் இணைப்புக்கூடாது என்று தான் சொல்கின்றேன்.

கேள்வி: கூடாதுஎன்று கூறும் ஒன்றை ஏன் இப்போது அமுல் நடத்துகின்றீர்கள்?

ஜே. ஆர்: இணைப்பை எதிர்த்துத்தான் இப்போதும் பேசுகின்றேன்.

கேள்வி: டிசம்பர் 19 யோசனைகளில் கூறப்பட்டபடி அம்பாறையைப் பிரித்துத்தான் கிழக்கு மாகாணம் இருக்குமா?

ஜே. ஆர்: டிசம்பர் 19 வரையுள்ள யோசனை தான் உடன்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

கேள்வி: விமானங்கள் மூலம் உணவுப்பொதிகளைப் போட்டது இலங்கை அரசுக்கு செய்தி ஒன்றைத் தெரிவிக்கவே என்று கூறினீர்கள். அச் செய்தி என்ன?

ராஜீவ்; நிவாரணம் பற்றிய செய்தி.

கேள்வி:விமான அத்துமீறல் சம்பவம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவியதா?

ராஜீவ்: அச் சம்பவம் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்று நான் நம்பவில்லை

கேள்வி: இடம் பெயர்ந்த சிங்கள, முஸ்லிம் அகதிகளும் பழைய இடங்களில் குடியமர்த்தப்படுவார்களா?

ஜே ஆர்: குடியமர்த்தப்படுவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பி வந்த பேக்கரியாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

கேள்வி: இந்திய-இலங்கை உடன்பாட்டை எதிர்ப்பவர்கள் 'அறியாமை' காரணமாக எதிர்க்கின்ருர்கள் என்று கூறினீர்கள். அப்படியானுல் உடன்பாட்டை உங்கள்அமைச்சர்கள் ஏன் எதிர்க்கின்ருர்கள்?

ஜே. ஆர்: அதுவும் அறியாமையே.

### கைதிகள் விடுவிப்பு

கேள்வி: தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள்?

ஜே. ஆர்: விடுவிக்கப்படுவார்கள் எப்போது என்று உடனே சொல்ல முடியாது.

கேள்வி: இந்தியாவில் பிறந்த புத்தர், காந்தி அண்ணல் வழியைப் பின்பற்றுவதாக நீங்கள் கூறுகின்றீர்கள்.

பிரதமர் ராஜீவ்காந்தி அசோகச் சக்கரவர்த்தியை நினைவூட்டுகின்ருர்.

ஆகவே இன்று கைச்சாத்திடப்பட்ட உடன்பாடு நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வருமா?

ஜே. ஆர்: எதுவும் நிரந்தரமானது என்று சொல்வதற்கில்லை. நிச்சயம் சமாதானம் தேவை.

கேள்வி: இந்த உடன்பாடு பற்றிய வல்லரசுகளின் நிலை எப்படி இருக்கும்?

ஜே. ஆர்: வல்லரசுகளின் எண்ணங்களை என்னுல் விவரித்துக் கூறவே முடியாது.

கேள்வி: தமிழர் தாயகம் என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கையை ஏற்பதாக உடன்பாடு அமைந்துள்ளது. சரியா?

ஜே. ஆர்; உடன்படிக்கையை வாசித்துப் பாருங்கள்பதில் கிடைக்கும். ★

- தொகுப்பு: தீபன்ராஜா -

# இந்திய கிரிக்கெட்டில் சுழல் பந்து வீச்சாளர்

நான்காவது உலக கிண்ணப் போட்டி இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நடைபெற உள்ளது. இறுதியாட்டம் நடைபெற உள்ள கல்கத்தாவின் ஈடன் காடின்ஸ் நவீனமயப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தியா, பாகிஸ்தானில் உள்ள ஆடுங்களகள் எல்லாம் சுழல் பந்து வீச்சாளர்களுக்கே சாதகமானவை. எனவே இம்முறை உலகக் கிண்ணத்தை யார் பெறுவது என்று முடிவு செய்யும் பொறுப்பு சுழல் பந்து வீச்சாளர்களின் கையிலேயே சென்றுள்ளது.

சுழல் பந்து வீச்சாளர்கள் என்றதுமே எமக்கு ஞாபகம் வருபவர்கள் இந்தியாவின் பிஷன் சிங் பேடி, சந்திரசேகர், பிரசன்ஞ, வெங்கட்ராகவன் தான்.

இந்த நான்கு சுழல் பந்து வீச்சாளர்களின் காலம் இந்திய சுழல் பந்து வீச்சாளர்களின் பொற்காலம் என்றே கூறவேண்டும். இந்தியா சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலூன்ற வழி வகுத்தவர்களும் இவர்களே.

தனது பந்து வீச்சினுல் பல துடுப்பாட்ட வீரர்களை விளையாட முடியாமல் திணறடிக்கச் செய்து அதன் காரணமாக துடுப்பாட்ட வீரர்களை இத்தகைய பந்து வீச்சிலிருந்து காப்பாற்றுவதற்காகக் கிரிக்கெட் விதிகளையே மாற்றச் செய்த பந்து வீச்சாளர் பிஷன் சிங் பேடி.

உலகப் புகழ்பெற்ற கிளைவ் லோயிட், சோபர்ஸ், சப்பல் சகோதரர்கள் போன்றவர்களே திணறும்படி பந்து வீசியவர்; கிரிக்கெட்டின் பிறப்பிடம் என்று அழைக்கப்படும் லோட்ஸ் மைதானத்தில் அதிக ஓட்டங்களைக் கொடுத்தபோதும் அதே வேளையில் அதிக ஓவர்கள் பந்து வீசியவர் என்ற பெருமையைப் பெற்றவர்.

தொடர்ச்சியாக ஓட்டங்களை வாரி வழங்கித் துடுப்பெடுத்தாட்டக்காரரை அவரின் வழியிலேயே விட்டுப் பிடித்துத் திடீரென அவரின் விக்கெட்டை வீழ்த்தும் சாமர்த்தியசாலி சந்திரசேகர். போலியோவால் பீடிக்கப்பட்ட கையினுலேயே லாவகமாக கூக்ளி பந்து வீசுபவர் அவர்.

இனரீதியில் பலமுறை குழுவில் இருந்து ஒதுக்கப்பட்டபோதும் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி உலக கிரிக்கெட் அரங்கில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தைத் தேடியவர் தமிழகம் தந்த வெங்கட்ராகவன்.

வெங்கட்டுடன் இன்னும் பதினெரு பந்து தடுப்பாளர்களை மட்டும் தந்தால் எந்த ஒரு பலமான கோஷ்டியையும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழக்கச் செய்வேன் என்று சோர்பஸினுல் புகழப்பட்டவர் இவர். இந்திய காப்டஞக முதல் டெஸ்டில் ஆடிவிட்டு



அடுத்த டெஸ்டிலேயே பன்னிரண்டாவது ஆட்டக்காரராகத் தள்ளப்பட்டபோதும் முகம் கோணுமல் ஆடும் பண்பாளன்.

தனது நாற்பது வயதிலும் இந்திய கோஷ்டிக்காக ஆடி, இந்தியாவிற்கு பல சிறப்புறும் வெற்றிகளைத் தேடித் தந்த பிரசன்ஞ இன்று இந்திய கோஷ்டியின் பொறுப்பாளராக இருப்பது இவர் திறமைக்குக் கொடுக்கப்பட்ட கௌரவமாகும்.

—இவர்களுக்குப் பின்பு ஒரு சிலரைத் தவிர இவர்களின் இடத்தை நிரப்பக் கூடிய அளவு திறமை படைத்த சுழல் பந்து வீச்சாளர்கள் இந்தியக் கோஷ்டியில் உருவாகாதது இந்தியாவுக்கு ஒரு

## விளையாட்டுத் துறை

பெரிய நஷ்டமே,

கபில்தேவின் டெஸ்ட் பிரவேசத்தின் பின் இந்திய கோஷ்டியில் சகலதுறை வீரர்களுக்கே அதிக இடம் ஒதுக்கப்பட்டு வருகிறது. சுழல் பந்து வீச்சாளர்களுக்கு அதிகம் வேலை கொடுக்கப்படுவதில்லை.

பேடியின் பின் அவருடைய பந்து வீச்சுச் சாயலிலேயே அவரைப் போல் பந்து வீசும் இன்னெரு தொப்பிக்காரர் மனீந்தர் சிங். மிகவும் குறைந்த சந்தர்ப்பங்களிலேயே இவர் கபில் தேவினுல் திறமையாகப் பயன்படுத்தப்பட்டார்.

வெங்கட்டின் பின் அவரின் இடத்தை நிரப்பு... சிவராமகிருஷ்ணன், ... சர்மா போன்ற இளைஞர்கள். சிறப்பாசப் பந்து வீசினுலும் இந்தியக் கோஷ்டியில் தமக்கு நிலையான இடத்தைப் பெறமுடியாமல் தவிப்பவர்கள். இவர்களின் அபார திறமைக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

ரவி சாஸ்திரி ஒரு சிறப்பான சுழல் பந்து வீச்சாளராஞலும் அடிப்படையில் இவர் ஒரு துடுப்பெடுத்தாட்ட வீரரே. இவரைத் தனியே நம்பி இன்னெரு சுழல் பந்து வீச்சாளரை கோஷ்டியில் சேர்க்காமல் விடுவது இந்தியக் கோஷ்டிக்குத்தான் நஷ்டமாகும்.

மற்றைய டெஸ்ட் ஆடும் நாடுகளின் கோஷ்டிகளில் எல்லாம் சுழல் பந்து வீச்சாளர்களுக்கு தட்டுப்பாடு உள்ள நிலையில் இந்தியா கைவசமுள்ளவர்களைத் திறமையாகப் பாவிக்காமல் விடுவது கண்ணிருந்தும் குருடனுக தொழில்படும் நிலையே.

தற்போது மற்றைய நாடுகள் எல்லாம் தங்களின் உலகக் கிண்ணத்திற்காக ஆடும் கோஷ்டிகளை அறிவித்துள்ள நிலையில் இந்தியக் கோஷ்டி மட்டும் கோஷ்டி தலைவர் பதவிக்கு குத்துவெட்டுப் ... நிலையே. ★

- ஈசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லல் அறுக்கும் நல்லைத் திருப்பதி

# வேலுருவில் வீற்றிருக்கிருன் முருகன்

சிறப்புக் கட்டுரை

சமயம்

வெற்றியின் சின்னம்வேல். அதனுல் அது வெற்றிவேல். அது வினை அறுப்பது; தொல்லை தீர்ப்பது; சீர்த்தி தருவது;

இந்தவேலே நல்லூரில் மூலமூர்த்தி இதுநல்லூர்ப்பதியின் தனிச்சிறப்பு.

வேலாக வீற்றிருக்கும் வேலவன், அல்லல் அறுத்து, தொல்லை வினை தீர்க்க, நல்லையில் எல்லையில்லாக் கருணையுடன் எழுந்தருளியிருக்கின்ருன்.

**நல்லூரின் சிறப்பு**

சைவமும் தமிழும் சிறப்புற்ருேங்கி வளர்ந்த இடம் நல்லூர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் முருக பக்தி நிறைந்த பிரதேசமாக பெருங்காலமாய்த் திகழ்ந்து வருகிறது.

கந்தபுராணப் படிப்பு யாழ்ப்பாணத்திலேயே மரபுமுறையாக விசேடமாக நடைபெற்று வருகிறது.

இதனுல் யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராணக் கலாசாரம் என்றேஅறிஞர்கள்அழைப்பார்கள் என்கின்ருர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

இத்துணைச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்திலே சிறந்து விளங்கும் முருகன் ஆலயங்களுள் முதன்மையானது நல்லூர்த் திருப்பதி.

ஆதியில் தமிழ் மன்னர்களின் வாசஸ்தலமாகவும், யாழ்ப்பாணத்தின் தலைநகராகவும் விளங்கியது இந்த நல்லூர்ப்பதியே.

இலங்கையின் கடைசித் தமிழ் மன்னனை சங்கிலியன் அரசாட்சி செய்தது இங்குதான்.

அவனது அரண்மனையின் முகப்புத்தோற்றம், இன்றும்கூட கோவிலை அண்டி, சங்கிலியன் தோப்பில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சைவமும் தமிழும் வளர்த்த திருப்பதி**

சைவமும், தமிழும் வளர்த்த பெருமைமிக்க தனுல் நல்லூர்ப்பதி முற்ருக சைவ மணம் கமழும் பூமியாகக் காட்சி தருகிறது.


சிறப்பு மிக்க நல்லூர் முருகன் ஆலயம் மட்டுமல்ல; அதைச் சூழ நான்கு புறமும் நெருக்கமாக எழுந்து நிற்கும் கோவில்கள் - நல்லூர் சிவன்கோயில், கைலாச பிள்ளையார் கோயில், சட்டநாதர் கோயில், திருநெல்வேலிச் சிவன் கோயில்,வீரமாகாளியம்மன் கோயில் முதலியவை-சைவம் செழிப்புற்ருேங்கி நிற்கும் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

இந்த நல்லை முருகன் ஆலயம் ஈழத்திருநாட்டிலே அமைப்பிற்கும் ஒழுங்கிற்கும், அழகிற்கும் பெயர்போன திருத்தலம்.

ஐந்து அடுக்குக் கொண்ட கோபுர முகப்புத் தோற்றம் - மணி தாங்கும் கோபுரங்களின் அமைப்புப் பொலிவு - கோயில் மண்டபங்களின் வண்ண அழகு - அகன்ற வீதிகளின் தூய்மை - கோயிலுடன் இணைந்து அமைந்திருக்கும் நந்தவனத்தின் பசுமை - கோயிலை அடுத்துக் காணப்படும் திருக்குளத்தின் தண்மை - அண்டியிருக்கும் நல்லை ஆதீனத்தின் சமயத் தொண்டு-எல்லாவற்றுக்கும் மேலாக கோயில் சூழலில் நிலவும் அமைதி மிக்க பக்தி உணர்வு - இவை நல்லூர்ப் பதிக்குப் பெருமை சேர்ப்பவை.

**தொன்மை மிக்க ஆலயம்**

இந்த ஆலயத்தின் தொன்மை பல நூற்ருண்டுகளுக்கு முற்பட்டது. சரித்திரச் சான்றுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும், தொல்பொருள்களும் அவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.



6ஆம் பராக்கிரமபாகு மன்னனின் பிரதானிகளுள் ஒருவனுன சண்பகப் பெருமாள் என்பவன் முன்னர் வடபகுதியைக் கைப்பற்றி ஆட்சி செய்தான் என்றும் —

கி. பி 1450 ஆம் ஆண்டளவில் அவனே இக்கோயிலைக் கட்டுவித்தான் என்றும் கூறப்படுகிறது.

**சீர்குலைவு**

பின்னர் இலங்கையைக்கைப்பற்றி ஆண்ட போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ருேரால் இந்த ஆலயத்துக்குப் பல இன்னல்கள் விளைவிக்கப்பட்டன.

இதனுல் சீர்குலைந்திருந்த இந்த ஆலயத்தைப் புதுப்பிக்கும் முயற்சி இரகுநாதமாப்பாண முதலியார் என்பவரால் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

1734 ஆம் ஆண்டளவில் நிர்மாண முயற்சிகள் தொடங்கின எனினும் முறையாகக் கோவில் அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது 1902 ஆம் ஆண்டில் தான்.

அன்று தொட்டு இன்றுவரை ஆலயம் நிர்மாண அமைப்பிலும், காட்சிப் பொலிவிலும் பலவகையிலும் உயர்ந்து வருகிறது.

முருகனின் தெய்வீக வெளிப்பாடும் அதிகரித்து வருவதாகப் பக்தர்கள் கூறுகின்றனர்.

**உய்தி பெற்ற திருத்தலம்**

ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள், நல்லை ஆதீனத்தின் முதலாவது பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முதலியோர் முருகனை வழிபட்டு உய்தி பெற்றது இந்தத் திருத்தலத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் ஆசாரத்துடன் ஒழுங்கு தவருமல், கட்டுப்பாட்டுடனும், நேர ஒழுங்குடனும் நேர்த்தியுடனும் பூஜைகள் நடைபெறும்ஆலயங்களுள் சிறப்பானது நல்லூர்ப்பதி என சைவ அன்பர்கள் போற்றுவர்.



இத்தகைய இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம், வழமைபோல ஆடி அமாவாசையை அடுத்து வரும் ஆருவது நாளில் —அதாவது நேற்று — கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்பமானது.

நல்லூர் முருகனில் இடையரு பக்தி செலுத்தும் அடியவர்கள் யாழ்ப்பாணத்தில் நிறைந்திருப்பதால், நல்லூர் ஆலய உற்சவ ஆரம்பத்துடன், முழு யாழ்ப்பாணமுமே பக்தி வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றது.

வேலுருவில் மூலமூர்த்தியாய் இருக்கும் முருகன் உற்சவகாலத்தில் உற்சவமூர்த்தியாய், வள்ளி தெய்வானை சமேதராய் பவனி வருவது பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இதனைத் தரிசித்து தெய்வீக அருள் பெறுவதற்காகத் தினம் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் வந்து கூடுவார்கள்.

முருகு என்ருல் 'அழகு, இளமை, என்று பொருள். முருகன் எழுந்தருளியிருப்பதால் என்னவோ நல்லூர்ப்பதி அழகும் செழிப்பும் மிக்கதாய்க் காணப்படுகின்றது.

அஞ்சுமுகம் தோன்றில்
ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென
வேல் தோன்றும்
நெஞ்சில் ஒரு கால்
நினைக்கின்
இருகாலும் தோன்றும்
முருகா என்று
ஓதுவோர் முன்.

குன்றம் எறிந்தாய்!
குரைகடலிற்
சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப்
பொருபடையாய்-
என்றும்
இளையாய்! அழகியாய்!
ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய்என்
உள்ளத்து உறை.★

- ந. வித்தியாதரன் -

# தன் சொந்தப் பிள்ளைகளைப் பலிகொடுத்துப்

# போராளிகளின் உயிர் காத்த தாயின் தியாகம்

இலக்கியம்

நானும் கம்பன் கழகத் தலைவரும் (திருநந்தகுமார்) நீர்வேலிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று திரும்பிக்கொண்டிருந்தோம். திடீரெனப் பார்த்தால் எங்களுக்கு மேல் ஒருஹெலிக்கொப்டர். அதன் கதவு திறந்திருக்கிறது. அதிலிருந்து துப்பாக்கிக்குழாய் நீட்டப்பட்டுள்ளது. எங்கள் நிலை எப்படி இருக்கும் என நீங்களே எண்ணிப் பாருங்கள். சத்தியமாகச் சொல்கிறேன் மோட்டார் சயிக்கிளில் இருந்தபடியே உச்சி முதல் உள்ளங்கால்வரை எனக்கு நடுங்கியது. நிறுத்து மோட்டார் சைக்கிளை என்றேன். நிறுத்திவிட்டு பக்கத்தில் பிளாட் போட்ட வீடு ஒன்று இருந்தது. அதற்குள் நிற்போம்என்று இருவரும் அங்கு கதறிக் கொண்டு ஓடினேம். படலையைத் திறந்து கொண்டு நாங்கள் ஓட கதவைத் திறந்து கொண்டு ஒரு தாய் வந்தார். வந்துசொன்னர்: 'தம்பிமாரே நீங்கள் இப்படி ஓடிவந்தால்,

> யாழ் கம்பன் விழா மேன்முறையீட்டுப் பட்டிமன்றத்தில் நிகழ்ந்த வாதங்கள் இவை. சொக்கன், இ. முருகையன், சி. வி. கே. சிவஞானம் ஆகியோர் நடுவர்கள் -
> தொகுப்பு-
> **வி. செல்வக்குமரன்**

எங்களையுமல்லோ சுடுவ'ன்' நீதியரசர் அவர்களே! அந்தத்தாய். தன் பிள்ளை அப்படி ஓடிவந்திருந்தால் அப்படிக் கேட்டிருப்பாளா? 'நீ வெளியே போ... உள்ளுக்கு வராதே... என்று சொல்லியிருக்க முடியுமா? நான் யாரோ ஒருத்தியின் பிள்ளை என்றபடியால்தானே அந்தத்தாய் அப்படிச் சொன்னர்.

**தூய தியாகம்**

இதுதான் இன்றுவரை எமது நாட்டின் மனேநிலை.அதனுல்தான் நான் இப்போ சொல்கிறேன். தூய தியாகம் இன்றுஎங்கள் நாட்டில் போதாது.

சுமித்திரை போன்ற ஒரு தாயின் நிலைப்பாட்டைப் பார்த்தால் தன் பிள்ளையல்ல முக்கியம். மாற்ருனின் பிள்ளையும் தன் பிள்ளையைப்போல் நினைக்கும் மனநிலை எமக்குத் தேவை. சுமித்திரையின் தியாகம் இன்றைய சூழ்நிலையில் நம்மவர்மத்தியில் பெரிதும் பதிய வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன். நான் சில செய்திகளைக் கூற விரும்புகிறேன்'

நடுவர் அவர்களே! சுமித்திரை சாதாரணமானவள் அல்ல. (எதிரி தரப்பினரைப் பார்த்து) இவர்கள் சொல்வதைப் போல சுயநலமில்லை அவளுக்கு. அவள் உள்ளம் தூய்மையானது. இவர்கள் கேட்டார்கள் பிள்ளையை நாட்டுக்குக் கொடுக்கவில்லை ராமனுக்குத்தானே கொடுத்தாள் என்று. ஐயா ராமன்தான் அந்தநாடு.

'என்வீட்டிலே பெண் சாதி பிள்ளைகள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. நீ நல்லாயிருக்க வேண்டும். நீ தானே நாடு என்ருர்கள் ராமன் நாடு. ராமனுக்கு ஒருவனைக் கொடுப்பது என்பது நாட்டுக்குக்கொடுப்பதுஎன்றுதான்பொருள். இலட்சுமணனையும் சத்துருக்கனையும் இருபிள்ளைகளையும் கொடுத்தாள்.

எதிர்தரப்பினரே அதை முடிக்கு ஆசைப்பட்டுக் கொடுத்ததாகச் சொன்னீர்களே!

ராமன் வருவானென்று எதிர்பார்த்திருந்த பரதன், ராமன் வரவில்லை என்றவுடன் நெருப்பை மூட்டி விழப்போகிறேன் என்று ஏறி நிற்கிருன். சத்துருக்கன் பக்கத்திலே வந்தான். எல்லோரும் வந்து தடுத்துப்பார்த்தார்கள். கோசலை வந்து தடுத்துப் பார்த்தாள் பரதாபோகாதே என்று. 'தாய்சொற்கேட்டலும், தந்தைசொற்கேட்டலும் ஈசற்கே கடன் என்கடன் அன்று' என்று அதை மறுத்து இதைராமனேடு வைத்திருங்கள், எனக்குச் சரிவராது என்ருன்.

அப்போது சத்துருக்கனை பக்கத்தில் கூப்பிட்டான்.

டுச் சொன்னான். ''அடே சத்துருக்கனு, இராமன்வரவில்லை.நான் நெருப்பிலே விழுந்து சாகப் போகிறேன். என் ஆட்சியை ஏற்றுக் கொள்'' என்ருன். அப்படிக் கொடுக்கிறபோது இந்தத்தாய் பக்கத்திலே நின்ருள் எதிர்த்தரப்பார் சொன்னமாதிரி அவள் குணம்படைத்தவளாக இருந்தால். ''அடே முடியை வேண்டடா வேண்டடா'' என்று ஜாடை செய்திருப்பாளே. வாயை மூடிக் கொண்டு சுமித்திரை நிற்கின்றபோதே அவள் பிள்ளை சொன்னதைச் சொல்கிறேன்.

ஒருவகைச் சிரிப்பை உதிர்த்தான். ஆ... பரதா...?ஆட்சியேவேண்டாம் என்று காட்டுக்குப் போனுனே அவன் எங்கள் அண்ணன்தானே!

அப்படி ஆட்சியே வேண்டாம் என்றுபோன அண்ணனுக்குக் காவலாக இருப்பதுதான் என் வேலை என்று இலட்சுமணன் போனுனே அவன் இராமனின் தம்பிதானே.

போன இரண்டுபேரும் திரும்பி வரவில்லை என்பதற்காக உயிரை விடுகிறேன் என்று சொல்கிருயே பரதா! நீயும் ராமனின் தம்பிதானே

அடே நீங்கள் மூன்று பேரும் இப்படி... கூடட்டிராசப் டல்லை [illegible] மட்டும் இந்த ஆட்சியில் இருப்பேன் என்று நினைத்தாயோடா எனக்கு வெட்கமில்லையோடா'' என்று கேட்டவன்தான் இந்த சத்துருக்கன். என்று கூறிய சத்துருக்கனைப் பார்த்துஇப்படி ஒரு பழி சொல்கிறீர்களே உங்களுக்கு நரகத்திலே குழி கிண்டுவார்கள். அது மட்டுமல்ல!

**வியட்னும் வீரவரலாறு**

சமகாலத்தோடு பொருத்தமான ஒரே ஒருசெய்தி. வியட்னும் போரிலே ஒரு சம்பவம். இப்படியெல்லாம் போராட்டம் நடந்ததா என்று ஆச்சரியப் படுவீர்கள்.

வியட்னும் போராட்டத்தில் ஒரு நாள் இரு போராளிகளை இராணுவத்தினர் துரத்திக்கொண்டு வந்தார்கள்

அப்படித் துரத்திக் கொண்டுவர அவ்விரு போராளிகளும் ஒரு வீட்டுக்குள் புகுந்து விட்டார்கள். அங்கேயிருந்த தாய் என்ன செய்தாள்? ஏன் வந்தீர்கள்? என்று கேட்டாள்.

அதற்கு அவர்கள் எங்களை இராணுவம் துரத்துகிறது. அதனுல் வந்தோம்.

அதைக்கேட்டு அவள் அப்படி... போராளிகளா... வாருங்கள் என்று கூட்டிக் கொண்டுபாய் வீட்டின் ஒருமூலையிலே ஒரு பெரிய கூடையால் மூடிவைத்து விட்டாள்.

வீட்டிற்குள் இவர்கள் புகுந்ததை இராணுவத்தினர் பார்த்துவிட்டார்கள். அங்கே புகுந்தார்கள். அந்தத் தாயைப் பார்த்து,' இங்குஇரண்டு பயங்கரவாதிகள் வந்தார்களா நாங்கள் வந்ததைக் கண்டோம் காட்டு'' என்ருர்கள். இவள் பயந்து நடுங்கினுள்.

அதோ கட்டிலில் படுத்துக் கிடக்கிருர்கள்', என்று சொன்னுள். கட்டிலில் போர்வையால் போர்த்தியபடி இருவர் படுத்திருந்தார்கள். வந்த இராணுவத்தினர் அந்த இருவரையும் கட்டிலிலேயே சுட்டுக் கொன்று விட்டுப்போக அயல் வீட்டவர்கள் வந்து பார்த்தார்கள்.

இறந்தவர்கள் அந்தத் தாயின் இரண்டு புதல்வர்கள்.

அந்த அயலவர்கள் கேட்டார்கள்,' அடி பாவி! உனக்கு ஈவு இரக்கம் பிள்ளைப்பாசம் என்று ஒன்றுமே இல்லையா? பாவி நீயும் ஒரு பெண்ணா? [illegible] ஒரு தாயா? இப்படிப் பிள்ளைகளை அநியாயமாகச் சாகடித்து விட்டாயே, இது நியாயமா? என்று கேட்டார்கள். அதற்கு அந்தத் தாய் சொன்னுளாம.

'நான்என்பிள்ளைகளைப் பலிகொடுத்து விட்டேன் என்பது உண்மை. ஆனுல் இந்தப் பிள்ளைகளைப்போல இன்னும் பத்துப் பிள்ளைகளை என்னுலபெறமுடியும்ஆனுல்', இந்த இரு போராளிகளைப் போல் என்னுல் பிரசவிக்க முடியாது என்று சொன்னுள்.

ஐயா இதைத்தான் நான் சொல்கிறேன். இத்தியாகம் நமது நாட்டுச் சூழலில் வந்துவிட்டதா?

அந்தப் பாடத்தை எமக்கு நெஞ்சிலே பதித்தவள் சுமித்திரை. இரண்டு பிள்ளைகளையும் கொடுத்தாள். உயிரைக் கொடுத்தால் பெரிது என்கிறீர்களே. எத்தனை தாய்மார் தாங்கள் இங்கிருந்து கொண்டு பிள்ளைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புகிருர்கள் தெரியுமா?

இந்தத் தாய்மாருக்கு தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடத் தெரியாமல் இல்லை. உயிரை விடப் பிள்ளை பெரிது என்பது தெளிவாகிறது.

அதனுலேதான் இந்தப் பிள்ளையைக் கொடுந்த தாயின் தியாகத்திற்குத் தலைவணங்குகிறேன்.

— இப்படி இ. ஜெயராஜ் தனது கருத்துரையில் கூறினுர்.

**சோ. பத்மநாதன்**

வீரமென்பது எமது தமிழர் சமுதாயத்தில் தொன்றுதொட்டு நிலவிய உணர்வு-முதல்நாள் போருக்குத் தந்தையை அனுப்பிய வீரத்தமிழ்ப் பெண் அடுத்த நாள் கணவனையும், மறுநாள் தன் மகனையும் போர்க்களம் அனுப்பிவைத்த வரலாறு நம்மிடம் உண்டு. இவ்வரலாறு புறநானூற்றுக் காலந்தொட்டு நம்மவரிடையே நிலவுகிறது.

இவ்வீர உணர்வு பாரம்பரியமாக நம்மிடம் உண்டு சுமித்திரை நமக்குத் தந்தது அல்ல

சொக்கன்: அப்படியானுல் சுமித்திரையின் தியாகத்தை நீங்கள் ஏன் ஏற்க மறுக்கிறீர்கள்.ஒரு பாத்திரத்துக்கு ஒரு நீதியும், இன்னொரு பாத்திரத்துக்குப் பிறிதொரு நீதியுமா?

சோ. பத்மநாதன்: அவள் இராஜதந்திரமாக நடந்து கொள்கிருள் வீரத்தில், நாட்டுக்காகத் தியாகஞ் செய்வதில் புறநானூற்றுத் தாய் சுமித்திரையை விஞ்சிவிடுகிருள்.

சிவஞானம்: அப்படியானுல் அவள் இலக்குவனைத் தடுத்திருக்கலாம் அல்லவா?

சோ. பத்மநாதன்; அவ்வாறு தடுத்திருப்பின், பிள்ளை சொற்கேட்டிருக்கமாட்டான்.

சிவஞானம்: அதனை இலக்கிய ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். இது ஓர் உளவியல் விவாதம் அன்று.

சோ. பத்மநாதன்: நான் உளவியல் பரிமாணத்தைத் தொட்டுவிட்டேன் என்பது புரிகிறது.

சுமித்திரை செய்தது தியாகம்! தியாகம் என்ருல் என்ன? கொள்கைக்காக, எம்மால் கைவிடமுடியாத ஒன்றைக் கைவிடுவது தியாகம்.

நாம் முன்னர் வீட்டைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தோம். அதனைக் கைவிட்டோம். உடமைகளை நகைகளை ஒரு காலத்தில் பேணிக் காத்தோம்.

ஆனுல் இன்ருே அவையனைத்தையும் இழந்த நிலையில் உயிரை மட்டும் கட்டிக் காக்க முனைகிருேம்.

சீதை, இலக்குவன், கும்பகர்ணன் மூவரும் சாகத் துணிகிருர்கள். இவர்களுள் உண்மையில் உயிரைக் கொடுத்தவன் தியாகஞ் செய்தவன் கும்பகர்ணன.

கும்பகர்ணன் ஓர் உண்மையான வீரன். நீதிவான் ''குன்றன்ன கொள்கையான்''-எனக் கம்பனுல் பாடப்பெற்ற கும்பகர்ணன், தலைவனிடம் தவறை இடித்துச் சொன்னவன்.

தனது அணித் தலைவனது பாதை பிழையென அவனுக்குத் தெரிகிறது. தலைவனைத் துறந்து போய்த் தன்னினத்துக்கு அழிவைத் தேடுவதா இல்லைத் தலைவன் அணியில் நின்று போராடி உயிரை இழப்பதா—

என்பதே கும்பகர்ணன் முகங்கொடுத்தபிரச்சினை

சொக்கன் — நீங்கள் வீரத்துக்கு வகுத்த வரைவிலக்கணத்தில் நீதியையும் அடக்கிக் கொள்வீர்கள் அல்லவா? அப்படியானுல் இன்னெருவன் மனைவியைக் கடத்திய தவறைக் கண்டித்து, களைந்து கும்பகர்ணன் நீதிசேர்க்க வேண்டாமா? நீதி என்பது கத்தியில் நடத்தல்.

சிவஞானம்:. வீரம் என்ற உங்கள் வரைவிலக்கணம் நீதிக்குப் பொருந்தாது. ஒருவீரன் நீதியின் பக்கம் நிற்க வேண்டுமா, அல்லது நியாயமற்ற ஒரு தலைவனுக்குக் கட்டுப்பட்டு நீதியற்ற செயற்பாட்டுக்கு உடந்தை போவதா?

சோ. பத்மநாதன்: நீதியின் பக்கம் போராடுபவர்களுக்கு இப்படி ஒரு சங்கடம் வரும். அதுதான் தருமசங்கடம். ★



அகில இலங்கைக் கம்பன் கழகம் ஒழுங்கு செய்த மூன்று நாட் கம்பன் விழாவில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவதையும் விழாவுக்கு வருகை தந்திருந்த இலக்கிய ஆர்வலர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

## அவன் காட்டிய பாதையில் அவள்...

நேரம் இரவு ஏழு மணியைத் தாண்டி விட்டது. அப்போதுதான் 'ஆசுப்பத்திரியில்' வேலை முடிந்துவந்த டாக்டர் அபிராமி, சோர்வு நீங்கக் குளித்துவிட்டு தாய் பகவதி தயாராக வைத்த சாப்பாட்டின் முன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். இரண்டு கவளம் உண்டபோது பெரிய இரைச்சலுடன் 'ஹெலி' ஒன்று வீட்டைக் கடந்து சென்றது. 'ஹெலி' போவது அன்றாட நிகழ்ச்சி தானே என்ற எண்ணத்துடன் மீண்டும் சாப்பிட ஆரம்பித்தாள். ஆனால் ஒரு ஹெலியைத் தொடர்ந்து, மற்றொரு ஹெலி, வேறு பொம்மர்கள்...... சத்தத்திலேயே மேலால் போவது என்ன? என்று பார்க்காமலே கூறக்கூடிய அளவிற்கு அனுபவப் பட்டு விட்டார்களே எல்லோரும்.

மேலும் சாப்பிடப் பிடிக்காத அபிராமி தட்டிலேயே கையைக் கழுவிவிட்டு விரைந்து சென்று யன்னலினூடாக வானத்தைப் பார்த்தாள். 'ஹெலி', 'பொம்மர்' எல்லாம் சற்றுத் தொலைவில் சுற்றும் சத்தம் மட்டுமே கேட்டது. வேறு எதுவுமே தெரியவில்லை. யன்னலினூடு தானும் பார்த்த பகவதி 'பகலில் தான் குண்டு போட்டாங்கள், இப்ப இரவிலும் மெல்லே வெளிக்கிட்டிட்டாங்கள் எங்க சுத்துறான் எண்டும் தெரியேல்லை. வெளிச்சம் இல்லாமலெல்லே சுத்துறான். இந்த இருட்டுக்குள்ள எப்பிடி பங்கருக்குள்ள இறங்கிறது. பாம்பு, பல்லி இருந்தாலும் இந்த அநியாயத்துக்கு எல்லையில்லையே, என்று புலம்ப ஆரம்பித்தாள்.

ஹெலி, பொம்மர் சுத்த ஆரம்பித்ததுமே ஆங்காங்கே தெரிந்த வெளிச்சங்களும் நிறுத்தப்பட்டன. எங்கும் ஒரே இருள். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் ஓரிரு தலைகள் ஒவ்வொரு வெளியினூடு வானத்தைக் கூர்ந்து பார்த்தபடியும் தமக்குள்ளே மிகவும் மெதுவாகக் கதைத்தபடியும் இருந்தன.

சிறிது நேரத்தில் ஹெலி பட, படவெனச் சுட ஆரம்பித்ததும், பங்கருக்கு ஓடுங்கோ, பங்கருக்கு ஓடுங்கோ என்ற சத்தமும் குழந்தைகளின் அழுகுரல் சத்தமும் போட்டி போட்டபடியே கேட்டுக் கொண்டிருந்தது. பகவதியும் - யன்னலைச் சாத்து அபிராமி உள்ளே வா என்று கத்த ஆரம்பித்தாள். உனக்கு பயமே இல்லாமல் போச்சு, உந்த டாக்குத்தர் தொழிலால மனமும் மரத்துப்போச்சு, இருபத்துநாலு வயதில ஞானிமாதிரிக் கதைப்பாய், உனக்கென்ன இரண்டு பேரை ஒரேயடியாய்ப் பறிகொடுத்த எனக்கு நீதான் ஒரு பிடி என்று பேசியவள் அழவே ஆரம்பித்து விட்டாள். தாய் அழ ஆரம்பித்தால் அபிராமியால் எதுவுமே பேச முடியவில்லை. ஆனால் அவள் உள்மனம் மட்டும் அம்மா நீ நினைப்பது போல டாக்குத்தராக வந்த பிறகு அல்ல. அதற்கு முதலே என் பதினெட்டாவது வயதிலேயே......, அந்தக் கொடிய சம்பவத்திலேயே என் மனம் கல்லாயிட்டுது என்று கூறியது.

அபிராமி மீண்டும் யன்னலினூடு பார்வையைச் செலுத்தினாள். பொம்மர் போடும் குண்டு தீப்பிழம்பாக பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது. திடீரென 'அவ்ரோ' குண்டு விழுந்த சத்தத்தில் பகவதியின் அழுகை திடீரென்று நின்றது. பகவதி மட்டுமா? இதுவரை நேரம் தாலாட்டுக்குக் கூட அடங்காமல் அழுத அடுத்தவீட்டுக் குழந்தை கூட அழுகையை நிறுத்தி விட்டது. இதையெல்லாம் பார்த்தபோது சிரிப்பதா? அழுவதா? என்று கூடப் புரியவில்லை அபிராமிக்கு.

சத்தங்கள் எல்லாம் ஒருவாறாக ஓய்ந்தபோது நேரம் எட்டுமுப்பது ஆகிவிட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டாரும் தெருவில் கூடிவிட்டார்கள் புதினம்பேச. இன்று எத்தனை கட்டிடங்கள் அழிந்தனவோ? எத்தனை அகதிகள் உருவானார்களோ? என்று எண்ணிய அபிராமிக்கு மீண்டும் சாப்பிடப் பிடிக்கவில்லை. தாயின் வற்புறுத்தலுக்காக ஒரு 'கப்' பால் மட்டுமே குடித்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்து கையால் கண்களை மறைத்தபடி தூங்க முயன்றாள். அவள் எத்தனிப்பைத் தடை செய்வதுபோல 'தொலைபேசி' மணி அலறியது. துடித்தெழுந்து ஓடியவள் தொலைபேசியைக் கையிலெடுத்து ஹலோ நான் அபிராமி பேசறேன்...... என்றாள்...... அதைத் தொடர்ந்து ரகுராம் அண்ணாவா?... சரி புறப்படுறேன்... சீக்கிரம் வாங்க என்றவள் தனக்குத் தேவையானவைகளை எடுத்துக் கொண்டு துரிதகெதியில் வாசலுக்கு வந்தவளைத் தொடர்ந்து வந்த பகவதியிடம்—

அம்மா... ரகுஅண்ணா போன் பண்ணினார். இன்று பலபேர் இறந்திட்டாங்களாம். ஐந்து பேரை 'ஹாஸ்பிட்டலில்' சேர்த்திருங்களாம். அதுதான் ரகுண்ணா என்னைக் கூட்டிப்போக வர்றதாய் சொன்னார். வந்து விபரம் சொல்லுறேன். அநேகமாக காலையிலே தான் வருவேன் என்று சொல்லி முடிக்கவும் ரகுராம் மோட்டார் சைக்கிளில் வரவும் சரியாக இருந்தது.

ரெடியா அபிரா?...... பெரியம்மா வர்றேன் என்றவன் அபிராமியையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டு விட்டான். பகவதிக்கு இது புதிதல்ல. இயக்கத்திற்கு சேவை செய்வதையே தன் முதல் கடமையாகக் கருதினாள் அபிராமி. அதனால் அவள் இப்படி அடிக்கடி போவதுண்டு. ரகுவிற்கு அபிராமியின் மேல் அபார நம்பிக்கை. தன் தூக்கத்தையும் மறந்து நோயாளர்களைக் காப்பாற்றுவாள். அவர்கள் 'ஹாஸ்பிட்டலை' அடைந்து சக டாக்டரிடம் அவள் பொறுப்பேற்றபோது, சிகிச்சை முடிந்து மூவரை பிரத்தியேக வார்ட்டில் அனுமதித்திருந்தார்கள். சிகிச்சையை முந்திக்



கொண்டே இருவரின் உயிர்கள் பயணமாகிவிட்டன. ரகு மூவரைப் பற்றியும் அபிராமிக்குச் சொன்னான்.

இப்போராளிகள் இண்டைக்கு போராட்டத்திலே பலரைக் கொன்றுட்டாங்க. இவங்களைக் காப்பாத்தினா இன்னும் இவங்களால நன்மையுண்டு என்றான். இருவரும் மயக்கத்தில் அசைவற்றுக் கிடந்தார்கள்.

அடுத்தது பெண் போராளி. இவ பெயர் ஜானி. உண்மைப் பெயர் அனுலா என்று ரகு சொன்னபோது திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அபிராமி இவ...இவ... என்று அபிராமி இழுத்த போது ஆமா..., உன் சிநேகிதிதான், அதாவது உன் அண்ணனின் அனுலா. விவரம் பிறகு சொல்லுறேன். மூவரும் மயக்கத்தில இருக்கிறாங்க. உன் பொறுப்பு நான் வர்றேன் என்று போய்விட்டான் ரகு.

**செல்வி. குலமதி கணபதிப்பிள்ளை**

விக்கிரத்துக்கு காலில் துளைத்த குண்டை எடுத்து விட்டார்கள். ரூபனுக்குத் தோள் பட்டையில், அவர்கள் தப்பிவிடுவார்கள் ஆனால் அனுலா குண்டை மார்பு மீது ஏந்தியிருக்கிறாள். சிக்கலான கேஸ் தான். இதுவரை பாறையாயிருந்த அபிராமியின் மனதில் ஈரம் கசிய ஆரம்பித்தது. அனுலாவைக் கூர்ந்து நோக்கினாள்.

கண்களைச் சுற்றிக் கருவளையம், கலைந்த கேசம் காய்ந்த உதடு, நெற்றியிலும் கன்னத்திலும் காயத்திற்குப் போடப்பட்ட கட்டு, உறுதியான முகபாவம், அனுலா... நீ... எப்படி? என்ற அபிராமிக்கு வேதனை தாங்க முடியவில்லை. தன் அறையில் சென்று அமர்ந்தவளுக்குத் தலைசுற்றியது. உடல் படபடத்தது. தன் நிலைமையை சீராக்க எண்ணி மேசையில் தலையை வைத்துக் கவிழ்ந்து படுத்தாள்.

இதுவரை புரட்டாத, புரட்ட விரும்பாத அந்தப் பழைய நாட்கள் அபிராமியின் மனப்புயலில் படபடத்தபடி அலைமோத ஆரம்பித்தன.

2

அபிராமியின் அப்பா ராஜேந்திரன் கொழும்பில் ஒரு நிறுவனத்தில் வேலையாயிருந்தார். அதற்கு வேறெங்கும் கிளைகள் இல்லாதபடியால் அவர்கள் குடும்பமே கொழும்பில் தங்க வேண்டி வந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள அவர்கள் வீட்டில் பாட்டியும், சித்தப்பாவின் மகனான ரகுராமும்தான் இருந்தார்கள். ரகுராம் சிறுவயதிலேயே தாய், தந்தையரை இழந்துவிட்டான். சிறு வயது முதலே அபிராமியும் அவள் அண்ணன் அரவிந்தனும் கொழும்பிலிருந்தபடியால் பல சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் அனுலா அபிராமியுடன் ஒன்றாகப் படிப்பதுடன் பக்கத்துவீட்டில் வசித்து வந்தாள். பெரும்பாலான நேரம் அனுலா அபிராமி வீட்டிலேயே இருப்பாள். அரவிந்தனுக்குத் தன் தங்கையுடன் அனுலாவையும் சீண்டி விளையாடுவதே வேலையாக இருக்கும். சிறு வயதில் ஆரம்பித்த பழக்கம் அவன் வாலிபப் பருவத்திலும் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அரவிந்தனும், அபிராமியும் சிங்களம் நன்றாகப் பேசுவார்கள். அனுலா கொச்சைத் தமிழில் கதைக்கும் போது, அரவிந்தன் பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்து விடுவான். அனுலாவிற்கு கண்களே கலங்கிவிடும். அரவிந்தனோ ஏன் அனு நீ சிங்களப் பெண் உனக்கேன் தமிழ் பேசும் ஆசை. நாங்கள் கொழும்பில் இருப்பதால் சிங்களம் பேச வேண்டிய நிர்ப்பந்தம். ஆனால் உனக்கேன் தமிழ்? என்பான்.

ஏன்? என் அம்மா தமிழ்ப் பெண் தானே, என்பாள். அனுலா பதிலுக்கு உண்மைதான்- அனுலாவின் அம்மா கோகிலா ஒரு தமிழ்ப் பெண். வேலை என்று வந்து அனுலாவின் அப்பாவின் காதல் வலையில் விழுந்து தாய், தந்தையரால் வெறுத்து ஒதுக்கப்பட்டவள். அனுலாவின் அப்பா தமிழ்ப் பெண்ணை விரும்பியவர், தமிழ்ப் பண்பாடுகளை வெறுத்து தன் மனைவி பிள்ளைகளைச் சிங்களப் பண்பாட்டில் வாழச் செய்தவர், சண்டிப்பானவர். கோகிலா எதற்குமே எதிர்த்துப் பேச மாட்டாள். அனுலாவிற்கு மூத்தவர்கள் நான்கு அண்ணன்மார். அவர்கள் முழுக்க முழுக்க சிங்கள ரத்தத்திலேயே பிறந்து விட்டவர்கள். ஆனால் அனுலா பெண் என்பதாலோ என்னவோ தமிழ் ரத்தமும் கலந்து பிறந்தவள் தமிழை விரும்பி, தமிழ் கலாசாரத்தையே அறியத் துடிப்பவள்.

அனுலா, அபிராமி வீட்டில் நிகழும் தமிழ் கொண்டாட்டங்களில் முன்னிற்பாள். ஒருநாள் அபிராமியைப்போலவே தனக்கும் சேலை உடுத்திவிடும்படி ஆசைப்பட்டாள். அபிராமியும் அவளின் நிறத்திற்கேற்ப கருஞ்சிவப்புச்சேலை ஒன்றை உடுத்தி அவளின் அழகை மெருகூட்டுவதுபோல காதோரத்தில் சிவப்புநிற ரோஜா ஒன்றையும் செருகிவிட்டாள்.

ஏய்...அனு... உன்னைப் பார்க்க எப்படி இருக்கு தெரியுமா என் கண்ணே பட்டுடும்போல இருக்கடி என்றாள் ஆனந்தத்துடன். அங்கே திடீரென வந்த அரவிந்தன் அனுலாவைக் கண்டதும் திகைத்துநின்றுவிட்டான். சிவப்புநிறச்சேலையின் நிறம் அவள் கண்ணாடிக் கன்னத்தில் பிரதிபலிப்பதுபோல இருந்தது. மேவி வாரப்பட்ட தலையும், கண்ணா? கருவண்டா? என்று சிந்திக்கும்வண்ணம் அந்தக் கண்களின் படபடப்பும். அவள் நாணி நிற்கும் விதமும்...

வைத்தகண் வாங்காமல் தன்னைப்பார்க்கும் அழகான வாட்டசாட்டமான, இளைஞனை அரவிந்தனைக் கண்டதும் ஓடி ஒளிந்துகொண்டாள் அனுலா....

அபி...உன் 'பிரண்ட்' தமிழ்ப் பெண்ணாகணும் என்றால் இன்னும் ஒன்று செய்யணும். அவநெற்றியில் ஒரு பொட்டுவைக்கணும் என்றான்.உடனே அனுலா நெற்றியில் பொட்டொன்றை வைத்துக்கொண்டாள். அப்படியே அரவிந்தனுக்குப் பிடிக்கும் விதத்தில் தன்னை ஒவ்வொன்றாக மாற்றத்தொடங்கினாள்.

அனுலா - அரவிந்தனின் காதல் எதிர்கால விளைவை அறியாது ஆரம்பமானது. அபிராமியோ - அனு...உங்க காதல் எங்குபோய்முடியுமோ பயமாயிருக்கடி— என்பாள். அனுலாவோ அபி,நாங்க பயப்பிடல்லை, நீயேண்டி பயப்பிடறே - என்று சிரிப்பாள். அனுலா இப்போது தமிழ் நன்றாகப் பேச ஆரம்பித்துவிட்டாள். விடுமுறைகளின் போது அரவிந்தனும், அபிராமியும் யாழ்ப்பாணத்திற்கு பாட்டியிடம் வருவதே வழமை. அந்த நாட்களில் அனுலா அழுதே விடுவாள். 'அப்போ நீயும் யாழ்ப்பாணம் வாவேன் என்று சிரிப்பான் அரவிந்தன்.

வேறு வினையே வேண்டாம் அப்பா கொன்றுடுவார் என்பாள் அனுலா.

அப்போ நீ எப்படி என்னுடன் வாழப் போறாய்? என்ற அரவிந்தனுக்கு அந்தவேளை என் உயிரைக் குடுத்தும் அப்பாவுடன் வாதாடுவேன் என்று சொல்வாள் அனுலா. இவர்களின் பேச்சைக் கேட்கும் அபிராமிக்கு இது எங்குபோய் முடியுமோ என்றிருக்கும்.

விடுமுறையின்போது யாழ்ப்பாணம் போகும் அரவிந்தன் ரகுராமுடன் எங்கோ புறப்பட்டுவிடுவான். அபிராமிக்குப் போகப்போகவே தெரிந்தது ரகுராம் இயக்கத்திலிருப்பதும், அரவிந்தன் அவர்களுக்கு உதவி செய்கிறான் என்பதும். கொழும்பிலிருந்து இரு நாட்கள் லீவு கிடைத்ததும் யாழ்ப்பாணம் போய்விடுவான் அரவிந்தன். அனுலா அபிராமியைகுடைந்தெடுப்பாள்.

ஒருநாள் அபிராமி..., அரவிந்தன் இயக்கத்திற்காகத்தான் யாழ்ப்பாணம் போகிறான் என்று சொல்லிவிட்டாள். அனுவிற்கு இதயத்துடிப்பே நின்றுவிட்டதுபோல இருந்தது. அதன்பின் அரவிந்தன்கதைகேட்கும் போதெல்லாம் அனு கதைக்காமலே போய் விடுவாள். அரவிந்தனும் விட்டபாடில்லை ஏன் உங்களுக்கு என்மேல் என்ன கோபமோ? என்று கேலியாகச் சீண்டுவான். கடைசியில் அனுலா நீங்கள் இயக்கத்திற்காகத்தானே யாழ்ப்பாணம் போறீங்க என்றாள். ஒருகணம் திடுக்கிட்டவன் பிறகு அமைதியாக, நிதானமான குரலில் ஓம் அதற்காகத்தான் போறேன் என்றான்.

அரவிந்...நீங்க செய்யிறது சரியா?ஏற்கனவே நாங்க எப்படி சேர்றது என்று பயந்திட்டிருக்கிறேன். இதில புதுசா வேறு குழப்பத்தை உண்டாக்கிறீங்களே-என்றாள் கோபமாக.

ஏய்... அனு உன்னை அடைவதைவிட என் தாய்மண்தான் எனக்கு முக்கியம்... நீயும் ஒரு தமிழ்த்தாயின் மகளென்றால எனக்காக ஒத்துழை. இல்லை சிங்கள அப்பாவின் மகளென்றால் போ. உனக்கு பலமுறை எங்க தமிழர் படுகிற அவஸ்தையைச் சொல்லியிருக்கிறேன். நீயும் அதைச்சரியென்று சொன்னே இப்ப ஏன் சுயநலவாதியாயிட்டே- என்று கோபமாக பேசியவன் அந்த இடத்தை விட்டே வெளியேறிவிட்டான்.

இவர்கள் பிரச்சினைக்குள் அனு வீட்டாருக்கு விசயம் எட்டி இரு வீட்டிற்கும் ஒரே ரகளை. அதைத் தொடர்ந்து இனப்பிரச்சினையும் வர சிங்களவர், தமிழரிடையேயுள்ள மோதலில், பல தமிழர்கள் கொலையுண்டார்கள். அவர்களில் ஒருவர் அபிராமியின் அப்பா, அதையடுத்து அனுலாவின் அண்ணர்மார் தங்கள் நண்பர்களுடன் சேர்ந்து அரவிந்தனை வெட்டிக் கொன்றனர். ஓடிவந்த அனுலாவையும் அடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். சடலங்களை எடுக்கக்கூட முடியாதநிலையில் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். அபிராமியும் தாய் பகவதியும் மகன் இறந்த செய்தியால் பாதிக்கப்பட்ட பாட்டியும்போய்ச் சேர்ந்துவிட்டாள்.

அடுக்கடுக்கான இழப்புகளால் இதயமே வெறுமையாகி விரக்தி நிலையை அடைந்த அபிராமி தான் இயக்கத்துக்கு சேரப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போதுதான் அபிராமி டாக்டருக்குப் படிக்கத் தெரிவுசெய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்தது பகவதியோ அபிராமியிடம்...அம்மா எல்லாம் இழந்த நான் உனக்காகத்தாண்டி உயிரோட இருக்கிறேன், நீயும் இயக்கம் அதுஇது என்றால் நான் முதல் செத்துப்போயிடுறேன் நீ பிறகு விரும்பியதை செய் என்று அழுதவள் ரகுராம் நீதான் புத்தி சொல்லடா என்று மன்றாடினாள். கடையில் ரகுராம்தான். அபிரா.... நீ இயக்கத்தில் சேராமலே நாட்டுக்கு சேவை செய்யுற வாய்ப்புகிடைச்சிருக்கே. நீ டாக்டராக வந்து பல போராளிகளைக் காப்பாத்தனும், அகதிகளைக் காப்பாத்தனும், நான் சொல்லுறதைக் கேளம்மா என்றான். ஒரு பிராந்தியப் பொறுப்பாளனான ரகுராம் சொன்னதை அபிரா ஏற்றுக்கொண்டாள்.

அபிராமி ஒரு டாக்டராயிருந்தும் அவள் மனதில் சந்தோஷத்திற்கே இடமில்லை. அது அழிந்து இல்லை அழிக்கப்பட்டு விட்டது. அவளுக்கு அனுலாவின் நினைவு வரும்போதெல்லாம், அவள் கணவன், குழந்தைகள் என்று குடும்பமாயிருப்பாள் என்றே நினைத்தாள் ஆனால்

3

டிங்...டிங்...டிங் என்று மணி பன்னிரண்டு அடித்தபோது, திடுக்கிட்டு எழுந்தாள் அபிராமி, நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து கொடுத்தவள் அனுலாவின் பக்கம் போனாள் அனுலா நினைவு திரும்பி முனகியபடியே படுத்திருந்தாள். முகத்தருகே குனிந்து மெதுவாக..... அனு...என்று கூப்பிட்டாள் அபிராமி. மெல்லக் கண்விழித்து அனுலாவின் கண்களில் ஒரு வித பிரகாசம்...அபி... அபிரா... என்று உதடுகள் ஓசையின்றி அசைந்தன. ஒரு நர்சிடம், குளுக்கோஸ் கரைத்து வரும்படி கூறித் தானே சிறிது சிறிதாகப் பருக்கிவிட்டாள்.சிறிது தெம்பு பெற்ற அனுலா அபிரா அபிரா...என்று கண் கலங்கினாள்... நோ, அனும்மா, நீ அழக்கூடாது, நீ ஒரு வீராங்கனை என்றாள் அபிராமி. இல்லை அபிரா... நான் என் அரவிந் என்று கலங்கியவளின் சிந்தனையை மாற்ற நினைத்த அபிராமி. அனு நீ எப்படி இங்கே வந்தே? என்று கேட்டாள் விரக்தியுடன் சிரித்த அனுலா, அன்று நீங்களெல்லாம் வந்தபிறகு நித்தமும் வீட்டில் சண்டை அப்பாவும், அண்ணன்மாரும் ஒரே அடி உதை, அம்மா பாவம் எனக்காக அழுவா. கடைசியில் எனக்கு கல்யாணம் என்றதும் வீட்டைவிட்டே புறப்பட்டுவிட்டேன். யாழ்ப்பாணம் என்று றெயிலில் ஏறிவிட்டேன்

அபிராமி—நான்தான் எங்கே போவது என்றே புரியவில்லை. அரவிந் சொன்ன நியாயங்களும் தாய் மண்ணுக்குசெய்ய வேண்டிய கடமைகளும் என் மனதில் அலைமோதின. என் தாய் மொழியும் தமிழ்தானே. தகப்பன்மொழி, தகப்பன் நாடு என்று ஒருவரும் சொல்வது வழமை இல்லையே? எனவே எனக்கும் தாய் மண்ணை மீட்க உரிமையுண்டு, அரவிந் விரும்பியதைச் செயலாற்றமுடியாமற் போனதைநான்தொடர விரும்பினேன், நானும் தமிழ்ப்பெண்ணாக உடைகளை மாற்றினேன். ஒருவாறாக ஒரு 'காம்'போய் சேர்ந்தேன் அங்கே... அங்கே...,—

இதுவரை ஒரு வேகத்துடன் பேசியவள் மூச்சிரைக்க ஆரம்பித்தாள் வேண்டாம் அனு...காலையில் பேசலாம்... இப்ப தூங்கு என்று சொல்லியும் கேளாது- அங்கே உங்க அண்ணா ரகுராமைச் சந்தித்தேன். நிறைய விசாரித்தார் (6ஆம் - பக்கம் பார்க்க)

## தீய உறவுள்ளோரை நம்பக்கூடாது

ஓர் ஊரில் தச்சன் ஒருவன் இருந்தான். தான் செய்யும் மரவேலைகளுக்காக மரம் வெட்டும் நோக்கில் நாள்தோறும் காட்டுக்குச் செல்வது வழக்கம்.

தச்சன் வழக்கமாகச் செல்லும் காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. அது மிகவும் நல்ல இயல்பு படைத்தது. ஆனால் தீயசிந்தனைகளின் உருவமாக அமைந்துவிட்ட ஒரு நரியும் காக்கையும் சிங்கத்தின் நண்பர்களாக இருந்தனர்.

சிங்கம் நல்ல இயல்புகளைக் கொண்டிருந்தாலும் சரி— காக்கை இவைகளின் துர்ப்போதனை காரணமாக தானும் சில அநியாயச் செயலில் ஈடுபட்டுவிடுவது உண்டு.

ஒருநாள் தச்சன் காட்டுக்கு மரம் வெட்டச் சென்றிருந்தபோது எதிர்பாராத நிலையில் சிங்கம் மட்டும் தனியாக எதிரே வந்து விட்டது.

தச்சன் நடுநடுங்கிப் போய் விட்டான். ''இந்தச் சிங்கம் என்னை அடித்துப்போட்டு தின்றுவிடப் போகிறதே! இன்று யார் முகத்தில் விழித்தோமோ'' என்று நெஞ்சு பதைபதைக்க தச்சன் தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

என்றாலும் மனத்திலே கடவுளைத் தியானித்துக் கொண்டு சிங்கத்தை நோக்கி' ''நண்பனே, உன்னுடைய நண்பனின் மனைவி உனக்கு என்று சில தின்பண்டங்களைச் செய்து அனுப்பியிருக்கின்றாள். இதனை ஏற்று உண்டு மகிழ்ந்து என்னைக் கௌரவிக்க வேண்டும்'' என மிகவும் பவ்வியமாக மரியாதையுடன் கேட்டான் தச்சன்.

தீய நண்பர்கள் அருகில் இல்லாததால் சிங்கம் தச்சனிடம் பெருந்தன்மையுடன் பழகத் தொடங்கியது.

''நண்பனே, உன்னுடைய உணவு முறைக்கும், என்னுடைய உணவு முறைக்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு. நீ சோறு தின்னும் வழக்கமுடையவன். நானோ விலங்குகளின் இறைச்சியை உண்டு வாழ்கிறவன். இருந்தாலும் நீ அன்புடன் தருவதால் உன்னுடைய உணவையும் நான் ருசி பார்க்கிறேன்'' என்று சிங்கம் கூறிற்று.

தச்சனுக்குப் போன உயிர் திரும்பியது. தான் கொண்டு வந்திருந்த சுவையான பலகாரங்களை சிங்கத்துக்குக் கொடுத்தான்.

அந்தப் பலகாரங்களை ருசித்துப் பார்த்த சிங்கத்துக்கு முழு திருப்தி ஏற்பட்டது.

''நண்பா, உன் வீட்டுப் பலகாரம் இவ்வளவு சுவையாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. மிகவும் நன்றாகத் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. இன்று முதல் நீயும் நானும் நெருக்கமான நண்பர்களாகிவிட்டோம். எவ்வித அச்சமும் இல்லாமல் நீ இந்தக் காட்டில் உலாவலாம். நீ காட்டிற்கு வரும்போதெல்லாம் அவசியம் என்னைச் சந்திக்க வேண்டும்'' என்று சிங்கம் கேட்டுக்கொண்டது.

தச்சன் மிகவும் மகிழ்ச்சியடைந்து சிங்கத்துக்கு நன்றி கூறினான்.

பிறகு, ''நண்பனே, நான் உன்னை அன்றாடம் [illegible] மிக்க மகிழ்ச்சியே. [illegible] என்னைச் சந்திக்கும் போது நீ மட்டுமே தனியாக இருக்க வேண்டும்'' என்று தச்சன் கேட்டுக்கொண்டான்.

அன்றுமுதல் அன்றாடம் காட்டுக்கு வரும் போதெல்லாம் தச்சனும் சிங்கமும் சந்தித்துக் கொண்டனர்.

தச்சன் வீட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக மனைவியின் மூலம் தயார் செய்து கொண்டுவரும் பலகாரங்களை சிங்கத்துக்கு உண்ணக் கொடுப்பான். சிங்கமும் அவற்றை விரும்பி உண்ணும். அவர்கள் நெடு நேரம் கலந்துரையாடுவர். பின்னர் இருவரும் பிரிந்து தத்தம் இடங்களுக்குச் செல்வர்.

சிங்கம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எங்கோ தனியாகச் [illegible] அதைக் கண்ட அதன் நண்பர்களான காக்கையும், நரியும் அது குறித்து ஒரு நாள் சிங்கத்திடம் விசாரித்தனர்.

''நண்பர்களே, எனக்கு ஒரு தச்சன் புதிய நண்பனாக வந்து வாய்த்திருக்கின்றான். மிகவும் நல்லவன். என்மீது அன்பைப் பொழிகின்றான். என் பொருட்டு அவன் மனைவி விதவிதமான பலகார வகைகளைச் செய்து அனுப்புகின்றாள். அவை மிகவும் ருசியாக உள்ளன நான் மிகவும் விரும்பி உண்ணுகின்றேன் ...'' என்று சிங்கம் கூறியது.

நட்பில் தங்களுக்குப் போட்டியாக ஒருவன் வந்துவிட்டான் என்ற தகவல் நரிக்கும்—காக்கைக்கும் பொறாமை உணர்ச்சியைத் தூண்டிவிட்டன.

அந்த நட்பை எவ்விதமாவது முறித்து விட வேண்டும், என எண்ணின.

நரி கூறிற்று, ''நண்பனே, இது என்ன பைத்தியக்காரத்தனமான நட்பு. நம்மைப்போன்ற காட்டு விலங்குகள் ஒரு மனிதனுடன் எவ்விதம் நட்பாக இருக்கமுடியும். அந்த மனிதனை அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான் நாம் உண்மையில் செய்யக்கூடிய ஒன்று'' ஆகும்.

சிங்கத்திற்கு கோபம் வந்துவிட்டது.

மடத்தனமாக உளறுதீர்கள். நண்பர்கள் என்றால் எல்லோரும் ஒரே மாதிரித்தான். நட்புதான் முக்கியமே தவிர,ஆள் முக்கியமல்ல அவர்களுக்கு தீங்கு இழைப்பதைப் பற்றி நான் சிந்தித்ததேயில்லை என்று கூறிவிட்டது,

நரியும், காக்கையும் அதற்கு மேல் ஒன்றுமே பேசவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த மனிதனைக் கொன்று தின்ன முயற்சிப்போம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டன.

பிறகு நரி, 'நண்பனே உன்னுடைய கருத்துக்கு மாறாக நாங்கள் பேச மாட்டோம். உன்னுடைய நண்பர்கள் எங்களுக்கும் நண்பர்களே! ஆகவே, உன்னுடைய நண்பனை நாங்களும் அறிமுக செய்துகொள்ள விரும்புகின்றோம். தயவு செய்து மற்றொரு முறை உன் நண்பன் வரும்போது எங்களுக்கும் அறிமுகப்படுத்து'' என கேட்டுக்கொண்டது.

அவ்விதமே செய்வதாக சிங்கம் வாக்குறுதி அளித்தது.

மறுநாள் தச்சன் புதிய நண்பனை அறிமுகப்படுத்துவதற்காக தனது மனைவியையும் உடன் அழைத்து வந்தான்.

வழக்கமாக சிங்கத்தை சந்திக்கும் இடத்தில் தச்சன் மனைவியுடன் காத்துக்கொண்டிருந்தான்.

அப்போது சற்று தொலைவில் சிங்கமும், (6ஆம்- பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சஞ்சீவி கவிதைக் கதம்பம்

### வருத்தங்கள் தீர்ப்பாய்!

மரகத மயில்மேல் சென்று
மன்னுயிர் காக்கும் வேலோய்
பரகதி வேண்டோம் இன்று
பார்வதி மைந்தா நாமும்
அரகர முருகா என்றே
அனுதினம் தொழுதோம் உன்னை
வரமது அளிப்பாய் எங்கள்
வருத்தங்கள் தீர்ப்பாய் நன்றே.

—சிங்கையாழியான்

### நல்லைநாதன்

நல்ல கதியினை அளித்திடுங் கந்தனை
நாடிட இடரதை நீக்கிடுஞ் சக்தியை
வள்ளி தெய்வானையர் வரித்த நற்றலைவனை
வெற்றிவேலுடன் விளங்கிடுங் குகன்தனை
வல்ல சூரனை வதைத்தமா வீரனை
வேண்டும் வரமதை வழங்கிடும் வள்ளலை
நல்லை நாதனை நினைத்திடு நெஞ்சமே
நாளும் வாழ்வினில் நலமது நிலவுமே.

—நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### பேய்க்கதை பேசாமல் போ!

நடக்கத் தெரியாத
நடைகெட்ட மனிதர்க்கு
குடை செருப்பேதுக்கடா—தம்பி!
குடை செருப் பேதுக்கடா!

கையிலோ காசில்லை
கடனுக்கோ வழியில்லை
பை இது ஏதுக்கடா—தம்பி
பை இது ஏதுக்கடா!

உண்ணவோ உணவில்லை
உயிர் தப்ப வழியில்லை
பேய்க்கதை ஏதுக்கடா—தம்பி!
போசாமல் போவனடா!

—குமார் தனபால்

### ஆடி விழா வருமோ?

அஞ்சுக மொழியர் இருவர்
அக்கம் பக்கம் அமர
வஞ்சக வினைகள் எரித்து
வேண்டும் வரங்கள் அருளும்
நெஞ்சக பதியின் முருகா!
நிட்டை கொண்டாய் எதனால்?
அஞ்சுதல் ஒழிப்பாய்; தமிழர்
ஓங்கி யுயர அருள்வாய்!

★

அடியார் காண வருமோ!
ஆடிப் பெருவிழா இனியும்?
கொடியார் செய்த கரவால்,
கூலிப் பிறப்பார் வலிவால்,
குடியார் கானல் சுமந்தோம்
கூடி விழாசெயப் பயந்தோம்
முடியாய் வேகும் பிணியை
மார்பில் உன்னை அணைத்தோம்.

### ஒரு வழி செல்வோம்!

சிலையின் விழியில் வந்தநீர்
சிந்தை மலையைக் கரைத்தது
அலையும் உலகின் நிலைமாற்ற
அன்றே உதிரம் கொடுத்தது
நிலையாய் வழியில் இன்றேங்கி
நெஞ்சை அய்லாய்க் குடைந்தது
விலையில் உயிர்கள் பலியாகி
வென்ற கதையைச் சொல்லுது.

★

எதுவும் நிலையாய் வளராமல்
இடையிற் பிணியும் வந்ததால்
அதுவும் சிலையாய் நிலையாமல்
உரிமைக் கண்ணீர் சொரியுதே!
'புதுமை' எனவே புகுவோரும்
பிறிதாய் இதனைப் பாருங்கள்!
முதுமை அறிவின் திறன்கண்டு
முரண்பா டற்றோர் வழி செல்வோம்.

மாவை - சி. சக்தியகுமாரன்

### விலங்கொடிப்பாள்

அடக்கத்தின் அணிகலன் பெண்ணும்,
அதனால் அடங்கிக் கிடந்தாள்.
அடங்கிக் கிடந்தவளை அருட்டிவிட்டார்,
அடிமைத் தனத்தைத் திணித்ததால்,

அருண்டெழுந்தவளை அடங்காப்பிடாரி
யென்றார்,
அவளின் திறமையை ஜீரணிக்கமுடியாதோர்.
படிப்பென்ன பட்டம் பதவியென்ன
ஆணுக்குச் சமமாக எல்லாவற்றையுமே
எடுத்துவிட்டாள் தன்திறமையினால்.

பெண் விடுதலை யெனப் போர்க்கொடி
உயர்த்தும் வேளையில்—வந்ததாம்
தாய் மண்ணுக்குக் கேடு
நித்தம் பொம்பர்ஹெலி ஷெல்லால்
வந்ததே அவளினத்துக்குச் சாவு.

அகப்பை ஏந்திப் பேனுபிடித்த கைகளால்,
தன்னினத்தின் விலங்கொடிப்பாள்
இன்று சங்க காலத்தாயை விஞ்சுகிறாள்.

—செல்வி.கமலாம்பிகை கணபதிப்பிள்ளை

# கணவன் ஆசையுடன் வாங்கிய சேலை; 'அவுட்-ஒவ்-பாஷன்' என்றாள் மனைவி

எமக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தும் இதுவரை நான் என் மனைவிக்குச் சேலையோ, சட்டைத்துணியோ எதுவுமே வாங்கிக்கொடுத்ததில்லை....

எனது மனைவிக்கு நானே ஒரு சேலை வாங்கிக் கொடுப்பது என்று, என்றுமில்லாதவாறு அன்றைக்கு எனக்கு ஓர் ஆசையுண்டாயிற்று. என்ன இருந்தாலும் ஒரு மனைவிக்கு வேண்டியதை ஒரு கணவன் வாங்கிக் கொடுக்க வேண்டும் — அதுதான் கணவனுக்கு அழகு. எப்படி இருந்தாலும், ஒரு கணவன் வாங்கித் தருவதை மனைவியானவள் மனநிறைவுடன் ஏற்க வேண்டும்- அதுதான் மனைவிக்கு அழகு.

எனக்கு முதன் முதலாகத் தோன்றிய அந்த ஆசையை, உடனே செயல்படுத்தி சேலையும் கையுமாக அவள் முன் தோன்றுவதற்குப் பதில், அந்த ஆசையைப்போய் அவளிடம் சொல்ல வெளிக்கிட்டேனே. என் புத்தி ஏன்தான் இப்படிப் போனதோ?. பெண் புத்திதான் பின் புத்தி என்றால், இந்த ஆண்களுக்கும் சில சமயம் புத்தி தடுமாறி விடுகின்றதே.

எனது உள்ளக் கிடக்கையைக் கேட்டதும், அவளின் முகம் போன போக்கைப்பார்க்கவேண்டுமே. ''உங்களுக்கேன் அந்த விஷப் பரீட்சை யெல்லாம்? சேலை வாங்குவது அப்படி ஒன்றும் இலேசான காரியமல்ல. அது ஒரு நுட்பமான கலை. அதெல்லாம் உங்களுக்குச் சரிவராது'' என்றாள் அவள்.

நுட்பமான கலை எனக்குக் கைவராது என்று ஒரு பெண்— அதுவும் நான் தொட்டுத் தாலி கட்டிய பெண் சொல்

**பொ. சண்முகநாதன்**

வதா? ''என்ன சொன்னாய்? எனக்குத் தெரியாத கலையும் கலையுணர்வும் உனக்குத்தான் இருக்கின்றது என்று எண்ணுகிறாயா? எப்படி இருந்தாலும் இந்த முறை நான்தான் சேலை வாங்கித்தருவேன். அதை நீ அணிந்துதான் ஆக வேண்டும்'' என்று கண்டிப்பாகச் சொன்னேன். பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்... இந்தத் தைரியம்கூட எனக்கு வரக்கூடாதா?

அவள் அதற்கு வேறொரு தினுசாகப் பதிலளித்தாள். 'உங்கள் இரசனையை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அது என்னால் முடியவும் முடியாது. ஆனால், இதுவோ பெண்கள் சம்பந்தப்பட்ட விவகாரம், தயவு செய்து இதிலெல்லாம் நீங்கள் தலையிடக்கூடாது'' என்றாள்.

அவளின் இந்தப் பதில் எனக்கு மேலும் கோபத்தைவரவழைத்து விட்டது. ''சந்தைக்குப் போவதற்கும், விறகு வாங்குவதற்கும், மில்லுக்குப் போவதற்கும் தான் நான் என்று நீ என்னை அவ்வளவு கேவலமாக நினைக்கிறாயா? கௌரவமான வேலைகளுக்கு நான் இலாயக்கில்லை என்பதுதான் உனது கணிப்பா?''

இப்படி நான் பொரிந்து தள்ளியதும், அவள் - தணிந்த குரலில் சொன்னாள். ''அப்படியெல்லாம் எதற்கு நீங்கள் வீணாக அலட்டிக் கொள்கிறீர்கள்? நீங்கள் வாங்கி வருகின்ற சாறியைக் கட்டிக்கொண்டு நான் நாலு பேருக்கு முன்னால் போவதில்லையா? அந்த நல்லெண்ணம் உங்களுக்கு இருக்க வேண்டாமா?''

நான் இந்தச் சந்தர்ப்பத்தை விடுவதாயில்லை. ''பார்த்தாயா? நீ மீண்டும் மீண்டும் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய். உலகத்திலே ஆண்கள் எவரும் தங்கள் மனைவிக்குச் சேலை வாங்கிக் கொடுப்ப

**நகைச்சுவை**

தில்லையா? எல்லோருமே தாங்களாகத்தான் கடைக்குப் போய் அவைகளைவாங்குகிறார்களா?''

அவளும் இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு விட்டுக்கொடுப்பதாயில்லை. ''உங்களுக்கு ஏன் வீண் சிரமம் என்றுதான் பார்த்தேன். வீட்டிலும் சரி வெளியிலும் சரி உங்களுக்குத்தான் எவ்வளவு கரைச்சல்களும் தொல்லைகளும்...... (இதைச் சொல்லும் போது அவள் கண்கள் எனக்காகக் கலங்குகின்றன.) பணம் உங்களுடையதாக இருக்கின்றபோது சாறியை யார் வாங்கினாலும், அந்தப் பெருமை உங்களைத் தானே சேரப்போகிறது. பணத்தைத் தாருங்கள், இல்லாவிட்டால் நானும் கடைக்குக் கூட வருகின்றேன்'' என்று அவள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கச் சொன்னாள்.

எனக்குத்தான் இதெல்லாம் பழகிப்போய் விட்டதே. அதனால் நான் உறுதியாகச் சொன்னேன். ''அதுதான் முடியாது என்கிறேன். உலகத்திலே கணவனுக்காக ஒரு மனைவி எத்தனையோ தியாகங்களைச் செய்யும்போது - அவனுக்காக அவள் எவ்வளவையோ அர்ப்பணிக்கும்போது — கேவலம், நீ என்னவென்றால் நான் வாங்கித்தருகின்ற சேலையை எப்படி அணிவது என்று கவலைப் படுகிறாயா?''

இப்படிச் சொல்லிவிட்டு, நான் பட்டணம் புறப்படுவதற்குத் தயாரானேன். என் மனைவியும் கூட வருவதானால், அதற்காக அலங்காரம் செய்யவே அவளுக்குக் குறைந்தது இரண்டு மணித்தியாலங்களாவது வேண்டும். அதற்கிடையில் நான் பட்டணம் போய் வந்துவிடுவேன். இதனால் அவளுக்குத் தோல்வியை அணைத்துக் கொள்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

''சரி உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்'' என்று அரைகுறை மனத்துடன் சொன்னவளை நோக்கி ''உனக்கு எத்தனை முழத்தில் சேலை வேண்டும்?'' என வினவினேன்.

''இதுதான் நீங்கள் சேலை வாங்கப்போகிற அழகா?'' எனச் சிரித்தாள் அவள்.

என்னிடமுள்ள பலம்- அதையே என்னுடைய பலவீனம் என்பாள் என் மனைவி, நான் ஏதாவது வாங்கவென்று ஒரு கடைக்குள் நுழைந்தால் அது தரமோ - தரமற்றதோ, இலாபமோ-நட்டமோ அதை வாங்கிக்கொண்டே திரும்புவேன். கடைகடையாக ஏறி இறங்குவதும், கடையைக் கலக்கி விட்டு வெறுங்கையோடுதிரும்புவதும் கடைக்காரர்களை வேண்டுமென்றே அவமதிப்பதுபோன்ற செயல் எனக் கருதி, அப்படிச் செய்வதை யான் தவிர்த்துவருபவன்.

புடைவைக் கடையைத்தான் எடுத்துக் கொள்வோம். பெண்கள் என்றால், புடைவைகளை எல்லாம் கலைத்தும், அவைகளை மேலது கீழாய்க் கீழது மேலாய்ப் புரட்டிவிட்டும் 'ஒன்றும் பிடிக்கவில்லை' என்று வேறு கடைக்குப்போவார்கள் அதையெல்லாம் கடைமுதலாளிகளும் சிப்பந்திகளும் எப்படித்தான் சகித்தும் பொறுத்தும் கொள்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், நாம் ஒரு புடைவையைக் காட்டி அதை எடுத்து மெதுவாகத் தொட்டுப்

(7-ஆம் பக்கம் பார்க்க)

# குரல்வளம் இல்லாத மாணவர்கள் கருவி இசையினைப் பயிலலாம்

சங்கீத நடன துறைகளுக்கான அகராதிக் கலைக் களஞ்சியம் (Enc--ycl pa dia in music & danc ) ஒன்றைத் தமிழில் முதன் முதல் உருவாக்குவதில் பல ஆண்டுகள் முயன்று வெற்றி கண்டுள்ளவர் கானப்பிரியா எஸ். என். நடராஜன்.

கேள்வி:- உங்களுக்கு இலங்கையுடனான தொடர்பு எப்படி ஏற்பட்டது?

பதில்:- இந்தியாவில் உள்ள காரைக்குடியில் 20-12-24 இல் பிறந்த நான் 1952 இல் இலங்கைக்கு வந்தபோது மாவிட்டபுரத்தில் கல்யாணம் செய்யும் நிலை ஏற்பட்டது. 1954 இல் எனக்கு இலங்கைப் பிரஜா உரிமை கிடைத்தது. 1954-58 வரைசுதந்திரன் பத்திரிகையில் கடமையாற்றினேன். 1959 இல் அரச பாடசாலை ஆசிரிய நியமனம் கிடைத்தது. இந்தியாவில் தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மணிக்கொடி, கலைமகள், போன்ற பத்திரிகை நிறுவனங்களில் கடமையாற்றியுள்ளேன்.

கேள்வி:- இசைத்துறை ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

பதில்:- எனக்கு அப்போது பத்து வயது. 1934இல் காரைக்குடியில் மகாராஸ்டபுரம் விஸ்வநாதர், செம்மை வைத்



தியநாதர், முசிரி சுப்பிரமணியர் போன்றோரின் கச்சேரிகளைக்கேட்டு என்னையறியாமல்இசைத் துறையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டது. மகாராஸ்டபுரம் விஸ்வநாதர் கல்யாணிராகம் பாடுவதாக ஒருவர் கூறக்கேட்டு அந்த ராகம் பற்றிய சிறு அனுபவத்தை மனதில் வைத்திருந்து செம்பாங்குடிஸ்ரீநிவாசர் கல்யாணிராகம் பாடிய வேறொரு கச்சேரியில் அந்த இராகத்தை என்னால் இனம் காணமுடிந்தது. இரண்டு

### சங்கீத-நடனக் கலைக்களஞ்சியம் உருவாக்கும் நடராஜன்

ஆண்டுகள் இப்படி கேள்வி ஞானம் மூலம் இராகங்களைக் கற்றுக் கொண்டேன். அப்போது பிரபல்யமாகியிருந்த ஏ. வி. எம். ஸ்தாபன இசைத்தட்டுக்களும் எனக்குச் சங்கீதத்தில் பிடிப்பு ஏற்படக் காரணமாக அமைந்தன.

கேள்வி:- அப்போ நீங்கள் சாஸ்திர ரீதியான சங்கீதத்தை முறைப்படி பயிலவில்லையா? மேடையில் கச்சேரி செய்யவில்லையா?

பதில்:- 1939 இல் காரைக்குடி தமிழிசைக் கல்லூரியிலும், பின்னர் மதுரை என். பாலசுப்பிரமணிய ஐயர், தேரழுந்தூர் ஸ்ரீநிவாசாரியார் ஆகியோரிடமும் முறைப்படி சங்கீதம் பயின்றேன். 1944 முதல் உமையாள்புரம் பரம்பரையைச்சேர்ந்தமைலாப்பூர் ஆதிவராகாச்சாரியாரிடமும் அப்பியாசம் செய்தேன். இந்தியாவிலும் இலங்கையிலும் பல மேடைக் கச்சேரிகளும் செய்துள்ளேன்.

கேள்வி:- இசைத்துறை ஆராய்ச்சி பற்றிக்குறிப்பிட்டீர்கள் அதைப்பற்றி விளக்கமாக கூறலாமா?

பதில்:- இசைத்துறைக்கென இதுவரை களஞ்சிய தொகுதி இல்லாதிருப்பது பெரும் குறை; இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இசை நடனக்கலைக் களஞ்சியம் ஒன்றை ஏழு தொகுதிகளாக தயாரித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். எனது 12

**- செல்வி. வி. பி. சர்மா -**

வருடமுயற்சியின் பலனாக முதலாவதுதொகுதி அச்சேறும் நிலைக்கு வந்துவிட்டது.

கேள்வி:- கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற உந்துதல் எப்படி ஏற்பட்டது?

பதில்:- சென்னை பல்கலைக்கழக டிப்புளோமா யான் செய்தபோது பேராசிரியர் சாம்பமூர்த்தி ''சங்கீதத்தைபரப்ப வேண்டும், ஆராய்ச்சி செய்து அதனை வளர்க்க வேண்டும் என விரும்பினர். அதன் நிமித்தம் தென் இந்திய இசை அகராதியை ஆங்கில மொழியில் மூன்று தொகுதிகள் வெளியிட்டதைத் தொடர்ந்து1973 இல் அவர் காலமாகி விட்டார். இடையில் நிறுத்தப்பட்ட அவ் வேலையைத் தொடரவும் அவரது ஆசையை நிறைவு செய்யவும் மிகுதியான தொகுதிகளைவெளியிட்டு என் குருபக்தியை நிறைவுசெய்ய விரும்பினேன். ஆங்கிலத்தில் இதனைத் தொடர்ந்து செய்வதாயின் அவரின் குடும்ப அனுமதி பெற வேண்டும். அதில் பல சிக்கல்கள் இருப்பதால் தமிழில் நடனக்கலையையும் சேர்த்து வெளியிட முடிவு செய்து. முயற்யில் ஈடுபட்டுள்ளேன். சி

கேள்வி:- இசை-நடன கலைக் களஞ்சியத்தில் அடங்கும் விடயங்கள் பற்றிக் கூறுங்கள்?

பதில்:- பல்வேறு இசை நூல்கள் கிடைக்காத இககாலத்தில் அநேகமாக வழக்கில் உள்ள எல்லா இசைநூல்களையும் ஆராய்ந்து, வகைப்படுத்திச் சுருக்கமாகத் தொகுத்து வெளியிடவுள்ளேன். இசையாளர்களின் வாழ்க்கை முறை

(6ஆம் - பக்கம் பார்க்க)

# வேலை செய்யும் பெண்களுக்கு ஆரோக்கியமான ஆலோசனைகள்

அலுவலகங்களில் வேலைபார்க்கும் பெண்கள் பல ஆண்களுக்கிடையே நாளின் பெரும் பகுதியைப் போக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறார்கள். அவர்களிடையே அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

ஆண்களை ஒட்டுமொத்தமாக ஒதுக்கவும் வேண்டாம். சகஜமாக நடந்துகொள்ளலாம். சில பெண்கள் ஆண்களிடம் முரண்பாடாகவே நடந்துகொள்வார்கள். சிலர் மிகவும் இணங்கி விடுகிறார்கள். இரண்டையுமே தவிர்க்கலாம்.

ஆண்களிடம் சிநேகமாக இருங்கள். ஆனால் நெருக்கமாகப் பழகாதீர்கள். நீங்கள் எந்த உள்ளெண்ணமும் இல்லாமல் பழகலாம் ஆனால் உங்களைச் சுற்றியுள்ளவர்கள் ஏதேனும் சங்கடங்கள் உண்டாக்கலாம்.அதனால் குறிப்பிட்ட ஒருவருடன் அதிக நேரம் பேசுவதையோ, பழகுவதையோ தவிர்க்கவும்.

யாரேனும் ஒருவருக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் கண்டு, மற்றவர் பொறாமைப்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

**உடை**

ஆண்கள் அதிகமாக வேலை செய்யும் இடமாக இருந்தால், நீங்கள் அலுவலகத்திற்கு அணிந்து செல்லும் உடைவிஷயத்

**- சுவாதி -**

தில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள். [illegible] வோ, 'லோ-கட்' அல்லது [illegible] அணிவதையோ தவிர்க்கலாம். சிலர் புடைவைத் தலைப்பை நன்கு மடித்து பின் போட்டுக்கொள்கிறார்கள். அதில் கடைசி மடிப்பை விட்டுவிட்டு பின்பக்கமாகபின்போட்டால் குனியும்போது பக்க வாட்டில் தெரியாமல் இருக்கும்.

அதிகமாக மேக்கப், மெல்லிய புடைவை போன்ற பிறரைக் கவரும்படியானஉடைகளைத் தவிர்க்கலாம். அலுவலகம் என்பது ஆடம்பரமான உடை உடுத்திச் செல்லும் இடம் இல்லை என்பதை மனதில் கொள்ளவும். உங்களைப் பார்க்கும் பிறர் மரியாதையை செலுத்தி கண்ணியமாக நினைக்கும்படி உடை அணியுங்கள்.

**மிதமான சுபாவம்**

பேசும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். சகஜமாகப் பேசும் பெண்கள் சலுகைகள் அளிப்பதிலும் தாராளமாக இருப்பார்கள் என்பது ஆண்களின் கணிப்பு. அளவுக்குமேல் அதிகமாகப் பேசுவதையோ, ஜோக்குகள் அடிப்பதையோ, உரக்கச் சிரிப்பதையோ தவிர்க்கலாம். அவர்களுடைய கண்ணியமற்ற ஆரவாரமான சம்பாஷணைகளில் நீங்களும் கலந்துகொண்டால், நீங்கள் அவர்களிடையே பிரபலமாக இருக்கலாம். அனால் அளவோடு அழகாகப் பேசும் பெண்கள்தான் இவர்களிடம் அதிக மரியாதையும் மதிப்பும் பெறுகிறார்கள். ஆரோக்கியமான நகைச்சுவையில் கலந்து அளவோடு சிரிக்கலாம். அதில் தவறில்லை! உங்களுக்குக்கீழ் பணிபுரிபவர்களிடம் அன்பாக நடந்துகொள்ளுங்கள். அவர்களை அழைக்கும்போது பணிவாகக் கூப்பிடுங்கள். அதிகாரமாக ஆணையிடாதீர்கள்! மாறான எண்ணங்களும் நாகரீகமும் கொண்ட ஆண்களிடையே, நாள் முழுவதும் அலுவலகம் என்னும் எல்லைக்குள் இருக்க வேண்டிய சூழ்நிலையில், தான், நடந்துகொள்ளும் முறையில் மிக்வும் கவனமாக பெண் என்பவள் இருப்பது அவசியம். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுமைகண்டுபொங்கும்கவிதைகள்

## யேசுராசாவின் குறுந்தொகை நூல்

1968 இலிருந்து 1981 வரையிலான காலப்பகுதியில் அவ்வப் போது 'உந்துதல்கள்' 'விண்டல்கள்' ஏற்பட்ட போது விளைவான கவிதைகளின் குறுந் தொகையே அறியப் படாதவர்கள் நினைவாக என்றுலும் யேசுராசா என்னும் நுண்ணுணர்த் திறன் மிக்க கவித்துவம் வாய்க்கப் பெற்ற சிறுமை கண்டு பொங் கும் ஒருவருடைய படைப்பிலக்கியச் செழுமையின் குறுக்கு வெட்டு முகமாகவும் அது காணப்படுகிறது.

வகைப்பாட்டுக்குள் அடங்கிப் பிரிக்கப்படா மல் வாழ்க்கையின் அனு பவங்கள், அவை கிளர்த் தும் பாடங்கள், அவை பற்றிய புரிதல், தெரி தல் போன்ற எல்லா மிணைந்து ஒட்டு மொத்த மான வெளிப்பாடாக அவருடைய தொகுதி உள்ளது. இதனுல்தான் உக்கிரமான தன்னுணர் வுக் கவிதைகளிலிருந்து (Brutally personal அர ரீசியல் தியில் கிளர்ச்சி யுற வைக்கும் தன்மை யான(Politically evoca- -tive) கவிதைகள் வரை ஒரு பன்முகப்பட்ட பார்வை இத்தொகுதி யில் உள்ளது

ஒரு கலைஞனின் அல் லது கலைப்படைப்பு களின் இந்த முழுமை யைப் புரிந்து கொள்வது

> நூல்: அறியப்படாதவர்கள் நினைவாக.
> ஆசிரியர்;- யேசுராசா
> அறிமுகம்:- உ. சேரன்

ஒரு ஆக்கபூர்வமான திற ஞய்வுக்கு முதன்மை யானது என்பது எனது கருத்து. எம். ஏ. நுஃமான் அவர்கள் தன் னுடைய 'அழியா நிழல் கள்' எனும் நூலின் முன் னுரையில் இதுபற்றிக் குறிப்பிடுவன நாங்கள் நினைவு கூருவது பொருத் தம்.

சமகால மார்க்ஸிய அழகியல் ஆய்வுகளில் பல வேறுபட்ட போக்கு கள் இருந்து வருகின் றன. இவை குறித்த ஒரு கலைப்படைப்பின் பல்வேறு அம்சங்களில் அழுத்தம் பெறவேண்டி யவை எவை? எப்போது? என்பது குறித்ததும் ஆகும். ஒரு பரிமாணம் கொண்ட பார்வையிலி ருந்து கிளைத்தெழும் அவசரப்பட்ட பொது மைப் படுத்தல்களுக்குள் கலை என்னும் தோற்றப் பாடு அடங்காது. கலை யைக் கருத்தியலாக மட் டும் (D·glogy) குறுக்கு வது இவற்றுள் ஒன்று கும். மார்க்ஸியம் எப் போதும் கலைப்படைப்பு களுக்கு இருக்கக்கூடிய கருத்து நிலையை வலி யுறுத்தி வந்துள்ளது.

ஒரு தனிப்பட்டவ னுடைய துயரம், இரங் கல், அதிருப்தி மெல்லிய மன ஊசலாட்ட போன் றன சர்வ வியாபகமான துயரத்தினதும் வலியின தும் பின்னணியில் கலா பூர்வமாக எழுப்பப்படு கிறபோது ஏற்படுத்தும் பாதிப்புப் பிரமாண்ட மானவை. பிக்காஸோ வின் குவேர்னிக்கா ஓவி யம் இதற்கு நல்ல உதா ரணம். ஸில்வியா பிளாத் மற்றும் எண்ணற்ற கவி ஞர்களின் அரட்டாடல் களும் இதற்கு உதார ணங்கள்.

முழு மானிட இருப்பி லும் எப்போதும் ஒரு துயரம், ஒருசந்தோஷம், ஒரு நம்பிக்கை இருந்து கொண்டே இருக்கிறது. நமது இதயம் எனும் திசை காட்டும் ஊசி எல்லா நேரங்களிலும் ஒரே திசையைக் காட்டு வதில்லை. அது இந்த முழு மானிட இருப்பில் அவ்வப்போது ஒவ் வொரு திசையைக் காட் டுகிறது. கலைஞன் பற் றிய, கலைப்படைப்புகள் பற்றிய இத்தகைய அடிப்படைப் புரிதிறன் எமக்கு அவசியமானது.

ஒரு கலைஞனிடம் எப் போதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் அறிவுக் கும் உணர்ச்சிக்குமான போராட்டத்தில் - (இது உண்மையில் முடிவற்ற ஒரு போராட்டம்; இப் போராட்டம் முடிவு பெற்றுவிட்டால் கலைப் படைப்புகளின் சாத்தி யப்பாடு பூச்சியமாகி விடும்) சில நேரங்களில் அறிவு தூக்கலாக நிற் கும் சில நேரங்களில் உணர்ச்சி தூக்கலாக நிற்கும். சில நேரங்க ளில் ஒப்பீட்டளவிலான சமநிலை பேணப்பட லாம். இவையனைத்தும் ஒரு கலைஞனின் ஆளுமை யிலும் அதன் விளைவான கலையாக்க நெறி (Crea- -tive Prucess) யிலும் தங்கியுள்ளது.

மொத்தத்தில் நமது கவிதையின் ஒரு முக்கிய மான பண்பை இனங் காட்டும் ஒரு தொகுதி இதுவெனலாம். ★

## 'கசப்பு' குறும்படம் ஒரு நல்ல முயற்சி

நிதர்சனம் தயாரித் துள்ள ''கசப்பு'' என் னும் வீடியோ குறும் படம் பார்க்கும் சந்தர்ப் பங் கிட்டியது. நிதர் சனத்தின் தயாரிப்பெனில் ஆயுதப் போராட்டம் பற்றியதாகவே இருக்கும் என்று பலர் எதிர்பார்க் கக் கூடும். இந்த எதிர் பார்ப்பை முறியடித்து, மக்களின் வாழ்வியல் ரீதியான பிரச்சினைகளை மிகுந்த அனுதாபத் தோடு பார்க்கக்கூடிய திறமையும் வலுவும் நிதர்சனத்திற்குண்டு என்பதை இந்தக் குறும் படம் நிரூபிக்கின்றது.

உழைப்பே கிடைப்பது அரிதாகவுள்ள இன் றைய சூழ்நிலையில் எப் போதாவது கிடைக்கக் கூடிய ஒரு நாள் உழைப் பினையும் குடிவெறியில் செலவு செய்துவிட்டு வீட்டுக்கு வெறுங்கை




யுடன் அகாலவேளையில் திரும்பும் ஒரு தந்தை யையும் அவரது அன் றைய உழைப்பினை எதிர் பார்த்துப் பசியோடு பட்டினி கிடக்கும் இரண்டு பிள்ளைகளையும் கொண்ட ஒரு குடும்பத் தின் கதை இது.

தந்தையார் உழைப்ப தைக் குடிவெறியிலே செலவழிப்பதிலே கண் ணுங் கருத்துமாக இருப் பதைத் திருத்த முடியா தென்பதை நினைத்த பள்ளி மாணவனை சிறு வயது மகன் புலர்ந்த அதிகாலைப் பொழுதில் கோடரியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு தொழில் தேடிப் புறப்படுகிறுன். மகனின் முடிவு தந் தையை அதிர்ச்சி

-வி. எம். குகராஜா-

கொள்ள வைக்கின்றது. இதுவே கதையின் முடிவு.

இக்கதைக் கூடாகப் பல சமுதாய நிகழ்வுகள் தொட்டுக்காட்டப்படு கின்றன. இவ்வாறு 'தேக அலுப்புக்கு' என்று தொடங்கி நிலைதடுமா றிக் கீழே வீழ்ந்து போகும் வரை குடித்து மகிழ்கிறுர்கள். எம்மவர் களில் பலர் என்பதும்— இவர்கள் குடித்து மகி ழும் அதேவேளை மறு புறத்தில் இவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஒருவேளைக் கஞ்சிக்கும் வழியின்றிக் காத்துக் கிடக்கின்றுர்கள் என்ப தும் - மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

## ஆத்மீக ஞானி தாளையான் குருபரன்



அற்று நின்றுர் உண்ணும்
ஊணே அறன் என்னும்
கற்றன போதம்
கமழ்பவர் மானிடர்
உற்று நின்றுங்கொரு
கூவற்குளத்தினில்
பற்றிவந்(து) உண்ணும்
பயன் அறியாரே.

உலகப் பற்றுகளைக் களைந்து, கற்பன கற்று, மெய்ஞ்ஞான போதம் கமழ்ந்து திகழும் மனித குல மாணிக்கங்கள் உல கின் வெவ்வேறு பகுதி களில் காலந்தோறும் உதித்து இறையருள் ஒளி பரப்பும் கண்ணுடிகளா கத் துலங்கி வந்துள்ள னர்.

அவ்வாறு இந்நூற்றுண் டின் முற்பாதியில் ஞான ஒளிபரப்பிக் கொழும் பில் வாழ்ந்த தாளையான் குருபரன் அவர்கள் தம்மை அடைந்த அன் பர்களின் மாயா பாச இருளை நீக்கி, அவர்களை அன்பர் பணிசெய்யத் தூண்டினுர்கள். அவர் களது அருமந்த வாக்கு களைக் கேட்டுச் சிந் தித்து, தாம்பெற்ற இன் பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்ற பெரு விருப்பால் தூண்டப்பட் டுத் தமது பிறப்பிட மான கரம்பனில் 'குரு மடம்' என்ற பெயரில் ஆன்மீக நிலையம் ஒன்றை நிறுவினுர் அந் தோனிட்பிள்ளை என்ற அடியார்.

'மகிழ்கின்ற செல்வமும்
மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச்
செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்
கோர் வீடுபேருகச்
சிமிழ் ஒன்று வைத்தமை
தேர்ந்தறியாரே'

என்ற திருமூலர் திரு வாக்குக்கு இணங்க தாம் தேடிய பெருஞ் செல்வம் குருவருளால் கிடைத் தது என்றும் - துறவிகள் வயிற்றுக்கவலை இன்றி

காவல் நகரோன்

வாழத்தக்க குருமடம் ஒன்றை அமைக்க வேண் டும் என்றும் துறவிகள் தோன்றுவதற்கு இளம் சிறுரின் உள்ளத்தில் ஞானவித்து இடல் வேண்டும் என்றும் ஆவல் கொண்ட அவர் தமது ஆவலை நிறைவேற்றி ஞர்.

கடந்த 19 ஆண்டுக ளாகக் குருமடம் தன் ஞல் ஆன ஆன்மீகப் பணியைச் செய்து வரு கின்றது.

## நீத்தார் புகழாரம்

### பண்பாளன் ஜெகதீசன்

புன் சிரிப்புடன் கூடிய வதனம், பெரிய உருவம், இதைவிடப் பெரிய மனம், எல்லோ ரது பிரச்சினைகளிலும் பாகுபாடின்றி அணுகி வலிந்து உதவி செய்யும் சுபாவம், பழகும் எல் லோருக்கும் கோபத்தை யும் வெறுப்பையும் கொடுக்காது, கள்ள



மில்லாச் சிரிப்பையும், அன்பையும் வாரி வழங் கும் பெருங்குணம், தன் கடமையைச் சிறிதளவும் பிசகாது நிறைவேற்றும் உயர்ந்த பண்பு. இவற் றின் மொத்த வடிவமே எங்கள் அருமைச் செல் வம் ஜெகதீசன்.

1946ல் தொடங்கிய இவரது உலக வாழ்க்கை 1987ல் எதிர்பாராத விதமாக வெறுங் கன வாய், கற்பனையாய், கானல் நீராக முடிந்து விட்டது.

லங்கா சிமெந்து லிமிட் டேட் ஸ்தாபனத்தில் பொறியியலாளராக பணி புரிய அமர்ந்த வேளையில் விதியின் கொடுமையால் காலத் தின் கோலத்தால், இரக்கமற்ற காலன் எங் கள் அன்பு ஜெகதீசனைக் கவர்ந்து சென்றுவிட் டான். அந்த நல்ல இதயத்தைத் துப்பாக் கிக் குண்டுகள் இரக்க மில்லாமல் துளைத்துவிட் டனவே!

அவரது நினைவுகள் என் றென்றும் மணம் பரப்பி நிற்கும் என்பது உறுதி!

மா. செல்வராசா
(சித்தியார்)

### பொற்குணம் கொண்ட ''பொறியியலாளர் சண்முகநாதன்''

வட்டுக்கோட்டை யைச் சேர்ந்தவரும் இலங்கை மின்சார சபைப் பிராந்திய பொறியியலாளராய் கடமையாற்றிய சண் முகநாதன் அண்மையில் இறைவனடி சேர்ந்தமை வட்டுக்கோட்டைக் கிரா மத்திற்கு ஓர் பேரிழப் பாகும். சாதாரண விவ சாயக் குடும்பத்தில் பிறந்து முயற்சியால் முன்னேறி பிராந்திய பொறியியலாளரான தோடு, எத்தனையோ பேருக்குக்கல்விச் செல் வத்தை ஊட்டியவர்.

ஏழை பணக்காரன், பண்டிதன் பாமரன், உயர்ந்தோர் தாழ்ந் தோர் என்ற பாகுபாடு களின்றி அனைவரையும் சமமாகநேசித்து சேவை, அன்பு, கருணைகொண்டு அனைவருக்கும் தன்னு லான உதவிகளைப் பின் னிற்காமல் செய்த பெருந்தகை. நாடினுேர் துயர் நீக்கிய நற்பண் பாளன். சாதாரண தொழில் நுட்பவியலாள ராய் சேர்ந்து கடின உழைப்பு, நேர்மை, கடமைத்திறன் போன்ற வற்றுல் பட்டதாரியா கிப்பிராந்திய பொறியிய லாளரானதோடு வட மாகாணத்தில் அனல் மின்சாரத்திட்டத்தை அமுலாக்குவதில் முன் னின்று உழைத்தவர்.

வட்டுக்கோட்டை வாசிகளால் ''சண்முக அண்ணை'' என அழைக் கப்பட்ட இவர் இள




பராயத்தில் பல முக்கிய சமய சமூக நிறுவனங் களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளைத் திறம்பட வகித்தவர். கொட்டைக்காடு நொச் சியம்பதி விநாயகரா லயம், துணவிவிநாயக ராலயம் போன்ற ஆல யங்களுக்கு மின் இணைப் பைப்பெற முன்னின்று உழைத்தவர். நாடினுேர் துயர்களைந்த வல்லவர் நல்லவர், அவர் ஆன்மா இறைவன் 'நீழலில் இன் புற்றிருப்பதாக'

சி. சபாநாதன்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 72



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ..................

விலாசம்:- ..................

வயது:- ..................

ஒப்பம்:- ..................

**இடமிருந்து வலம்**

1. உண்ணுவிரதம், 6. பக்கம், 7. ஆபரண வகைகளில் ஒன்று, 8. குழந்தை. 9. இதுவும் குழந்தையே, 11. நீரிலும் வாழும், நிலத் திலும் இருக்கும், 12. விரோதம், 13. உடல் வளர்ச்சிக்கு அவசியமானது, 15. ஓர் உறுப்பு 16. தனு, 17. பிழையல்ல 20. பாதை, 21. திட்டு, 22. இல்லாள்.

**மேலிருந்து கீழ்**

1. ஆராதனை, 2. வெகுமதி, 3. மணம்.இறுதி இழந்துவிட்டது, 4. இணக்கம், 5. தட்சனை 7. உதயதேவி, 10. சிரசு, 11. முதலாவது நபர், 12. இசைப்பாட்டு, 14. உதயன் 15. பரிவு, 18. கூட்டம், 19. தருமம்.

**சொற்சிலம்பம் போட்டி இல. 70 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பூமகள், 4. ஆதாம், 6. மாதவி, 7. பழம் 8. தைரியம், 10. விசை, 12. விண் 13. கைகுவி, 16. மறதி, 18. திரிசங்கு 20. மதுரை, 22. குகை, 24. திணை, 25. சனி 26. ஆனி.

**மேலிருந்து கீழ்**

1. பூமாதேவி, 2. மத, 3. கவிதை, 4. ஆழம் 5. தாம். 7. பயறு, 9. மைண்டி, 11. சைகை 12. விறகு, 14. குதிரை, 15. விரி, 16.மங்கை 17. தாமதி, 19.சகுனி, 21. துணை,23.மானி.

**சொற்சிலம்பம் போட்டி இல. 70**

**பரிசு பெற்றவர்கள் விவரம்**

முதலாம் பரிசு:- ச. மகாலிங்கம், ஊற்றங்கரை வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை.

இரண்டாம் பரிசு:- செல்வி. மோ. இந்திராணி, சரவணப் பொய்கை, மந்துவில், கொடிகாமம்.

மூன்றும் பரிசு:- செல்வி. சாந்தகுமாரி இரத்தினசபாபதி, ஞா.பா.ச.வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

## குரல்வளம் இல்லாத மாணவர்கள்...

(5ஆம்பக்கத்தொடர்ச்சி) இசைலட்சணங்கள், பாடல் பெற்ற ஸ்தலங் கள், இசைக்கருவிகள், தாளவகைகள், உருப்படி கள், முத்திரைகள், ரசங் கள், இசை - குறவஞ்சி நாடகங்கள், நடனங்கள் போன்ற 60 க்கு மேற் பட்ட தலைப்புக்களில் ஏழு தொகுதிகளாக களஞ்சியம் அமையும் ஒவ்வொரு தொகுதியி லும் 2750 விடயங்கள் வரை விளக்கப்படுகின் றன

கேள்வி:- இவ்வளவு பெரிய கட்டமானவிட யத்தை நீங்கள் யாரு டைய உதவியுடன் மேற் கொள்கிறீர்கள்?

பதில்:- நான் தனி யொருவனுகவே இதில் ஈடுபட்டுள்ளேன். நான் படித்தகாலத்தில் இசை சம்பந்தமான குறிப்புக் கள், வாழ்க்கை வரலாறு கள், சம்பவங்கள் பற் றிய குறிப்புக்களைதொகு த்துள்ளேன் இந்தியாவி லிருக்கும்போதே இசைத் துறை சம்பந்தமான அரிய நூல்களை சேகரித் துள்ளேன். வடமொழி -தமிழ்கன்னடம் - இந்தி போன்ற மொழிவளம் எனக்கு உண்டு. இவற் றின் உதவியுடன் இதனை நிறைவு செய்யலாம் எனத் துணிந்துள்ளேன் சென்னை பல்கலைக்கழக நூலகம் போன்றவற்றி லும் பலவிவரங்களைத் திரட்டியுள்ளேன்.

கேள்வி:- இசைக்கலை ஞர்கள் - இசை பயில் வோர் - மாணவர்கள் ஆகி யோருக்கு சஞ்சீவி மூலம் என்ன கூறவிரும்புகிறீர் கள்?

பதில்:- மக்கள் இசை யின் அடிப்படைஞானம் பெறவும், ரசிக்கவும் இசைக்கலைஞர்கள் தான் ஆவன செய்ய வேண் டும்.

குரல்வளம் இல்லாத மாணவர்கள் கூட கருவி இசையைப் பயில முடி யும். மாணவர்கள் தாம் படிக்கும் கல்வி எவ்வளவு தூரம் வாழ்க்கைக்கு பயன்படுகிறதோ தெரிய வில்லை. ஆனுல் அவர்கள் பயிலும் சங்கீதம் வாழ்க் கையில் என்றும் அவர் களுக்கு பயன்படும் என் பது மட்டும் உறுதி. ★

## தீய உறவுள்ளோரை...

(4ம்-பக்கத் தொடர்ச்சி) அதன் நண்பர்களான நரியும், காக்கையும் வந்து கொண்டிருப்பதை தச்சன் பார்த்துவிட் டான்.

உடனே அவன் பெரிய மரத்தில் தன் மனைவியை ஏற்றிவிட்டுத் தானும் மரத்தின் மேல் ஏறி விட்டான்.

மரத்தடிக்கு வந்த சிங் கம் தச்சனின் வழக்கத் துக்கு மாறுன அந்தச் செயலைக் கண்டு திகைப் படைந்தது.

மரத்தின் உயரத்திலி ருந்த தச்சனை நோக்கி, ''என்ன நண்பா, இன்று உன்னுடைய நடவ டிக்கை மிகவும் விசித் திரமாக உள்ளதே. என்னை உனக்கு அடை யாளம் தெரியவில்லையா? நான் உனது அருமை நண்பன் அல்லவா! என்னைக் கண்டு ஏன் பயந்து மரத்தின் மீது ஏறினுய்?'' என சிங்கம் கேட்டது.

''நண்பா, உன்னை எனக்கு அடையாளம் தெரியாமல் இல்லை. உன் னைக் கண்டு நான் அச்சப் படவும் இல்லை. ஆனுல் உன்னுடன் வந்திருக்கும் நண்பர்களை என் மனம் நம்பவோ ஏற்றுக் கொள்ளவோ விரும்ப வில்லை. அதனுல்தான் தற்காப்புக்காக மரத்தில் ஏறிக் கொண்டேன்'' என்று தச்சன் கூறினுன்.

★ ★ ★

## அவன் காட்டிய...

(4 -ம் பக்கத்தொடர்ச்சி) கள். நான் உங்கஅண்ணு வோடும். உன்னேடும் சேர்ந்து எடுத்த படத் தைக் காட்டினேன், அப் போதுதான்ரகு சொன் ஞர் அரவிந் என்னைப் பற்றித் தனக்குச் சொல்லியிருக்காராம்.

அபிராமி நான்தான் ரகுவிடம் சொன்னேன் நான் யாழ்ப்பாணம் வந்ததுபற்றி உனக்கோ, அம்மாவிற்கோ சொல்ல வேணும் என்று உங் களைப் பார்த்தால் என் உறுதியே போயிடும் என்றுஅபி......நான்...... நான்... இனி தப்ப... சந்தர்ப்பம் இல்லை. என் னுடை அம்மாவை... எப்பவாவது சந்திக்க நேர்ந்தால் என்னைப் பற் றிச்சொல்லு...

அபிரா...உன் அம்மா எப்படி?... அவவோட இழப்பை ஈடுசெய்யவே முடியாது... நீ... என்பக் கத்திலேயே இருக்கணும் நான் அனுதையாக செத்திடு வேனென்று நினைச்சேன் ஆனு...நான் மிகவும் விரும்பிய நீயே என் பக்கத்தில் இருக் கிறே...அபிரா...'ப்ளீஸ்' எனக்கு?கசிலநிமிடங்கள் மட்டும் என்னுடன்இரு. நான், நான் என்றவள் அபிராமியின் கையை இறுகப் பற்றிக்கொண் டாள்.

அபிராமி கண்கள் கலங்க அனுவின் நெற்றி யில் மென்மையாக முத்தமிட்டவள், அவள் காதருகே குனிந்து அனும்மா...நான் உன் கூடவே இருக்கேன் என் ருள். அனுலாவின் முகத்தில் ஒரு மலர்வு..

அதுமாறு முன்பே அர விந்தனைத்தேடி அவள் ஆத்மா புறப்பட்டுவிட் டது. ★

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட விசாரணை; நீண்ட தொகுப்புரை

## குறுகிய நேரத்தில் விடுதலைத் தீர்ப்பு!

வில்லியம் கைது செய்யப்பட்டவுடன் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டான்.

ஆனல், தான் விற்ற நகைகளை பொலிஸார் மீட்டெடுத்தனர் என்பதை அறிந்தபின்னரே அவன் ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்க முன்வந்தான். இது அவனது இயல்புபற்றிய நம்பகத்தன்மையில், ஜூரர்களின்மனதில் பாதிப்பை ஏற்படுத்தியது.

கொலை நடந்து சில மணி நேரத்தினுள் சதாசிவம் கைதானார். அப்போது அவர் சோதனைக்குட்படுத்தப்பட்டார். அவர் உடலில் வித்தியாசமான காயங்கள் ஏதும் இருக்கவில்லை.

ஆனல் கொலை நடந்து சுமார் பத்து நாட்களின் பின்னர் கைதான வில்லியத்தின் முகத்தில் நகத்தினல் ஏற்பட்ட பல கீறல் காயங்கள் காணப்பட்டன. அவை பத்து நாட்களுக்கு முன்னர் ஏற்பட்டு, ஆறிவரும் நிலையில், இருந்ததை மருத்துவ சோதனை உறுதிப்படுத்தியது.

இந்தக் காயங்கள் கொலைச் சம்பவத்தின் போது தனக்கு ஏற்பட்டதாக வில்லியம் ஒப்புக்கொண்டான்.

ஆனல் தனது எஜமானர் சதாசிவம் கொலையைப் புரிந்த சமயம், அவரது உத்தரவுக்குக் கீழ்ப்பணிந்து திருமதி சதாசிவத்தின் காலைத் தான் அழுத்திப் பிடித்ததாகவும்—

அவ்வேளை இக்காயங்கள் தனக்கு ஏற்பட்டதாகவும் அவன் சொன்ஞன்.

### ...த்துறையில் மருத்துவ இயல்

ஆனல் இந்தக் 'கதை' குறித்து டாக்டர் ஸ்மித்தின் சாட்சியத்தில் சந்தேகத்தைக் கிளப்பும் கேள்வி ஒன்று எழுந்தது.

''திருமதி சதாசிவத்தை நிலத்தில் வீழ்த்தி, அவரது கழுத்தை நெரித்துக்கொன்றதாகக் கூறப்படும் சதாசிவத்தின், முகத்தில் நகக்கீறல் காயங்கள் ஏதும் காணப்படவில்லை.

'ஆனல் காலைப்பிடித்து அமர்த்திய வில்லியத்தின் முகத்தில் பல நகக்கீறல் காயங்கள் கொலையின்போது ஏற்பட்டன. இதை நம்பமுடியுமா?—

இப்படிக் கேள்வி எழுப்பப்பட்டது.

கொலை செய்யப்பட்ட திருமதி சதாசிவத்தின் சேலை பல இடங்களில் கிழிபட்டிருந்தது.

அது மட்டுமல்லாமல சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையில் மற்றொரு முக்கிய விடயமும் காணப்பட்டது.

திருமதி சதாசிவத்தின் சேலையில் பெரிய அளவில் ஆண் விந்துத் திராவகம் (Large Stain of Seminal matter) பரவியிருந்தற்கான அடையாளங்கள் காணப்பட்டன என்பது தான் அது.

ஆகவே ஒரு முறை சேட்டான நடத்தைக்கான தாக்குதலினல் இந்தக் கொலை நிகழ்ந்திருக்க வேண்டும் என சேர். சிட்னி ஸ்மித் கருத்து வெளியிட்டார்.

கொலை எப்படி நடந்திருக்கமுடியும் என்பதை அவர் மீள் செயல்முறை மூலம் (Re Construction) விளக்குவதைப் பார்ப்போம்:-

திரு. சதாசிவம் வீட்டைவிட்டு வெளியேறிய பின்னர், மேல் மாடியிலிருந்த திருமதி சதாசிவம் கீழே இறங்கிச் சமையலறைக்குச் சென்றிருக்கவேண்டும்.

அவ்வேளை வில்லியம் சமையலறையில் தேங்காய் துருவிக்கொண்டிருந்திருப்பான்.

திருமதி சதாசிவம் குறைந்த ஆடைகளுடன் ஜன்னல் ஓரம் நின்றதைக்கண்ட வில்லியம், பாலியல் உணர்ச்சி தூண்டப்பட ஒழுக்கக்கேடான முயற்சியில்

### சதாசிவம் கொலை வழக்கு

ஈடுபட்டிருக்கவேண்டும்.

தான் பலவந்தப்படுத்தப்படுவதற்கு எதிராகத் திருமதி சதாசிவம் எப்படியாவது போராடியிருப்பார்.

வில்லியம் திருமதி சதாசிவத்தின் கழுத்தைப்பிடித்து நெரித்து அவரை சமையல்அறைச் சுவரோடு, அல்லதுவாசல் வழிச் சுவரோடு சேர்த்து அமர்த்தி திருமதி சதாசிவம் அணிந்திருந்த சேலையைக் கிழித்திருப்பான்

இந்தப் போராட்டத்தில் சுவரில் சாய்ந்தபடியே அரை மயக்க நிலைக்குச் சென்ற திருமதி சதாசிவம் அந்நிலையில் சிறுநீர் கழித்திருக்க வேண்டும்.

அதன்பின்னர் வில்லியம் திருமதி சதாசிவத்தைச் சமையலறை வழியாக இழுத்துச் சென்று சராஜில் போட்டுக் கொலை செய்திருக்க வேண்டும்.

(அங்கம் 5)

அல்லது ஒழுக்கக்கேடாக நடந்த பின்னர் கொலை செய்திருக்க வேண்டும்.

திருமதி சதாசிவத்தின் உடலை சமையலறையில் சரிவதற்கு வில்லியம் விடவில்லை, பிடித்தபடியே கராஜிற்குக் கொண்டு சென்று அங்கேயே கீழே சரிய விட்டிருக்க வேண்டும்.

திருமதி சதாசிவத்தின் உடல் சமையலறைக்குள் நிலத்தில் கிடக்க விடப்பட்டிருந்தால் அவரது கிழிந்த சேலையில் முன்னர் கூறப்பட்ட- சுருப்புத் தூளும், தேங்காய்த் தும்புகளும் - சட்டாயம் ஒட்டிக் கொண்டிருந்திருக்கும். அப்படியான பொருள் ஏதும் சேலையில் காணப்படவில்லை.

மேலும் சமையலறையில் திருமதி சதாசிவம் இழுபட்டுச் சென்றதற்கான அடையாளங்கள் (drag marks) இருந்ததாக டாக்டர் டி சேரம் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்ருர்.

வில்லியம் தனது ஒப்புதல் வாக்கு மூலத்தில் கூறியது போன்று - திருமதி சதாசிவத்தின் சடலத்தை வில்லியமும், திரு. சதாசிவமும் நிலத்தில் படாமல் சராஜ் வரை தூக்கிச் சென்றது உண்மையானல் — சமையலறையில் சடலத்தை இழுத்துச் சென்ற அடையாளம் ஏற்பட்டிருக்க முடியுமா?

—இப்படி சேர் சிட்னி ஸ்மித் தெரிவித்தார்.

கொலைச் சம்பவம் நடந்து சுமார் ஒரு வருட காலத்தின் பின்னரே வழக்கு விசாரணை நடைபெற்றது. அதுவரை திரு. சதாசிவம் விளக்கமறியலில் இருந்தார்.

வழக்கு விசாரணை நீண்ட நாட்கள் — சுமார் மூன்று மாதங்கள் — நடைபெற்றன.

மிகப் பரபரப்பான நிலையில் சேர் சிட்னி ஸ்மித் எதிரி தரப்பில் ஆஜராகி வாதாடிய பின்னர் நீதிபதி கிறேஷியன் ஒரு நீண்ட தொகுப்புரை நிகழ்த்தினர்.

சம்பவம் நடந்து ஒரு வருட காலத்தின் பின் நீண்ட விசாரணை நீண்ட தொகுப்புரை —

ஆனல் விசாரணை முடிவில், ஒரு சிறிது நேர ஆலோசனையின் பின்னர் ஜூரர்கள் சதாசிவம் ''குற்றவாளி அல்ல'' என்று, ஏகமனதான தீர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தச்சுவாரஸ்யமான வழக்கு விசாரணையின் போது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், குறுக்கு விசாரணையில் தாம் எவ்வாறு புரட்டி எடுக்கப்பட்டோம் என்பதையும் சேர் ஸ்மித் கூறுவதை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

(வளரும்)

-- தமிழில் தருபவர் வித்தி --

# ஆயுத குறைப்பு ஒப்பந்தத்தை நோக்கி இருபெரும் வல்லரசுகள்

## சர்வதேச அரங்கில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றுகள்

வல்லரசுக்களுக்கிடையில் அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் ஒன்று உருவாகும் வாய்ப்பு கனிந்து வருவதாக அமெரிக்க அதிபர் றெனல்ட் றேகன் அறிவித்துள்ளார்.

இவரின் அறிவிப்பு சர்வதேச அரங்கில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்த முடிவில் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாக்கி நகர்கள்மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள் பெரும் அழிவை ஏற்படுத்தி இருந்தன. ஜப்பானைச் சரணடைய வைத்தது மட்டுமன்றி போரையே முடிவுக்குக் கொண்டுவந்ததும் இந்தக்குண்டுகள் தான்.

போர் முடிந்து இன்று 40 வருடங்களுக்கு மேல் கழிந்துவிட்டன.

அமெரிக்கா — சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் அன்றிலிருந்து ஆரம்பமான போட்டி இன்று முழு உலகையுமே ஒரு நொடிப்பொழுதில் அழித்துவிடக்கூடிய அளவுக்கு விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

ஒரு நாடு இன்னொரு நாட்டை அழிப்பதை இலக்காக வைத்து ஆரம்பிக்கப்பட்ட அணுஆயுதக் குவிப்புகள் முழு உலகையுமே அழித்துவிடும்ஆபத்தை தோற்றுவித்துள்ளன.

### ஜெனீவா பேச்சு

இந்த நிலையிலேயே சோவியத் யூனியனும், அமெரிக்காவும் அணு ஆயுதக் குறைப்புச் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ஜெனீவாவில் ஆரம்பித்தன.

பல தடவை இருதரப்பினரும் கூடிப்பேசியும் உருப்படியான முன்



றேகன்

னேற்றம் எதுவும் ஏற்படத்தவறி இருந்தது.

இதற்கு ஒரு காரணம் ஐரோப்பாவில் நடுத்தர ஏவுகணைகளை ஒழிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும் ஒவ்வொரு நாடும் தலா 100 ஏவுகணைகளை வைத்திருப்பதற்கு அனுமதி அளிக்கப்படவேண்டும் என்ற சோவியத் யூனியனின் கோரிக்கையே.

ஐஸ்லாந்தின் தலைநகரான ரெக்யாவிக்கில் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவுக்கும் அமெரிக்க அதிபர் றெனல்ட் றேகனுக்கும் இடையில் இடம்பெற்ற உச்சி மாநாட்டின்போது ஐரோப்பாவில் இருந்து நடுத்தர ஏவுகணைகள் முழுவதும் அழிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

ஒவ்வொரு நாடும் 100 ஏவுகணைகளை வைத்திருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று சோவியத் யூனியன் கோரியது.

அதன் பின்பு நடந்த ஜெனீவாப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படாததுக்கு சோவியத் யூனியனின் இந்த நிலையே காரணமாக இருந்தது.

தற்போது சோவியத் அதிபர் ஐரோப்பாவில் இருந்த நடுத்தர ஏவுகணைகளையும் ஆசியாவில் இருந்து நடுத்தர குறுகிய தூர ஏவுகணைகளையும் ஒழிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

அதிபர் கோர்ப்பச்சேவின் புகழ்பெற்ற விளாடிவொஸ்ரொக் உரை இடம்பெற்று கிட்டத்தட்ட ஒரு வருட காலத்தின் பின்னர் அணுஆயுதக் குறைப்புச் சம்பந்தமான சுமுகமான அறிவிப்பு வெளி

**உலக உலா** — என்.பி.சீலன்

வந்திருக்கிறது.

கடந்த ஆண்டு ஜூலை 28 ஆம் திகதி விளாடிவொஸ்ரொக்கில் நிகழ்த்திய உரையில் ஆப்கானிஸ்தானில் இருந்தும் மொங்கோலியாவிலிருந்தும் சோவியத் துருப்புக்கள்வாபஸ் பெறும்என்று திடீரென அறிவித்து அமெரிக்காவையும் அதன் நேச நாடுகளையும் சோவியத் அதிபர் வியப்பில் ஆழ்த்தி இருந்தார்.

### நிபந்தனைகள்

ஐரோப்பாவில்இருந்து நடுத்தர ஏவுகணைகளை ஒழிக்கும் சோவியத்யூனி



கோர்ப்பச் சேவ்

யனின் அறிவிப்பு வெளிவந்தபோது அதைச் செயற்படுத்துவதற்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் சோவியத்யூனியன் சில சிக்கலான நிபந்தனைகளை அமெரிக்காவுக்கு விதிக்கலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது.

சோவியத் யூனியனில் இருந்து விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்று இதனைத் தற்போது உறுதிப் படுத்துகிறது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள 72 யூ. எஸ் பேர்ஷிங் IA (Pershing) ரக ஏவுகணைகளை அமெரிக்கா அகற்றவேண்டும் என்பதே அந்தக்கோரிக்கை.

இந்த ஒவ்வொரு ஏவுகணையும் இரண்டாவது உலக மகாயுத்த முடிவில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் மீது வீசப்பட்ட 20 அணுக்குண்டுகளுக்குச் சமமான சக்தி கொண்டவை என்று சோவியத் உதவி வெளிவிவகார அமைச்சர் யூலி வொரண்சோவ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமெரிக்கா பதில் எதுவும் அளிக்கவில்லை.

அதே சமயம் ஐரோப்பாவில் இருந்து நடுத்தர ஏவுகணைகளை அகற்றும் முடிவால் சோவியத்யூனியனின் பாதுகாப்புத் திட்டத்துக்குப் பெரும் பாதிப்பு எதுவும் ஏற்பட்டுவிடமாட்டாது என்று ''நேட்டோ'' என்று அழைக்கப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் ஸ்தாபனத்தின் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பாவில் உள்ள நடுத்தர ஏவுகணைகளை குறுகிய தூர ஏவுகணைகளாக மாற்ற அமெரிக்கா முயலக்கூடாது என்று சோவியத் யூனியன் எச்சரிக்கிறது.

இந்த நிலையில் செப்டம்பர் 20 ஆம் திகதி சோவியத் — அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பு வாஷிங்டனில் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

இந்தச் சந்திப்பு வருட இறுதியில் கோர்ப்பச்சேவ் - றேகன் சந்திப்புக்கு வழிவகுக்கும்.

தற்போது நிலவும் சுமுகமான சூழ்நிலை தொடருமானல் கோர்ப்பச்சேவ் - றேகன் சந்திப் பின்போது வரலாற்றுப் புகழ்மிக்க ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

# ஆடிவேல் விழாவில் நமது யாழ் கலைஞர்கள்

வருடா வருடம் கொழும்பில் நடைபெறும் ஆடிவேல் விழாவிலும் ஈழத்துக் கலைஞர்கள் சிறப்பான கச்சேரிகள் நிகழ்த்தி வருகின்றனர். இவ்வருடமும் 7 - 8 - 87இல் கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிர



மணிய சுவாமி கோவிலில் இடம் பெறும் ஆடிவேல் விழாவில் ஈழத்தின் சிறந்த நாதசுர-தவில் கலைஞர்கள் பங்குபற்றிச் சிறப்பாக இருக்கிருர்கள். 3 தினங்



கள் இக்கச்சேரி நிகழ இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் நாதசுர-தவில், கலைஞர்களில் இருவர் குறிப்பிடத்தக்கவர்கள்:-

இணுவில் என். ஆர். சின்னராஜா: தவில் வாசிப்பில் தனித்துவத்தைக் கடைப்பிடிக்கும் இவர் தான் வாசிப்பதை சட்டவரையறையுடன் சரியான முறையில் வாசிக்கவேண்டும் என்ற மனேநிடத்தைக் கொண்டுள்ளவர். தவில் மேதை அமரர்தெட்சணமூர்த்தியுடன் இணைந்து பலகாலம் வாசித்து சிறந்த அனுபவம் பெற்றவர். சிங்கப்பூர்மலேசியா-இந்தியா மற்றும் பல நாடுகளில் தவில் கச்சேரி நிகழ்த்தி பாராட்டுப் பெற்றவர். ''விவகார வித்துவமணி'' ''தாள அலங்கார கற்பக ஜோதி'' போன்று பல்வேறு பட்டங்களும், கௌரவங்களும் பெற்றவர். இன்றைய தவில் கலைஞர்களுக்கு முன்னேடியாகத் திகழ்பவர். ஆடிவேல் விழாவில் முன்பும் பலமுறை கச்சேரி நிகழ்த்தியவர் என்ற உபருமையும் இவருக்குண்டு.

அளவெட்டி எஸ். சிதம்பரநாதன்:-

மாவை ஆதீனத்தைச் சேர்ந்த சோமாஸ்கந்தர் பரம்பரையில் வந்த இவர் 8 வயதிலிருந்து நாதஸ்வரத்தை முறையாகப் பயின்று ஈழத்தின் தலை சிறந்த இளம் வித்துவான்களில் ஒருவராகத் திகழ்கிருர்.

'நாதஸ்வர வித்துவான்', 'சுயஞானரத்தினம்' போன்ற பல பட்டங்களையும், யாழ். பல்கலைக்கழகத்தால் கௌரவமும், மற்றும் பல இடங்களில் பாராட்டும், கௌரவமும் பெற்றவர். சிங்கப்பூர், மலேசியாவிலும், இந்தியாவிலும் கச்சேரிகள் நிகழ்த்திப் பாராட்டுப் பெற்றவர். ஆடிவேல் விழாவில் முதல் தடவையாக கச்சேரி நிகழ்த்தும் இவர் தனது திறமையான வாசிப்பினல் ரசிகர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருக்கும் ஓர் சிறந்த கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

இணுவில் சி. இரவீந்திரன்:-

மாவிட்டபுரம்என்.சபாநாதன்:

- எஸ். ஆர். ஞானசுந்தரம் -

வளர்ந்து வரும் இவ்விரு இளங்கலைஞர்களும் மேற்படி பிரபல கலைஞர்களுடன்இணைந்து ஆடிவேல் விழாவில் கச்சேரி நிகழ்த்துவர்.

இக்குழுவினரின் நாதஸ்வர தவில் கச்சேரி தமிழ் மக்களுக்குப் பெருமை தேடித்தரும் கச்சேரியாக அமையும் என்பதில் ஐயமில்லை.



ஒருவர்: இந்த ஓட்டலில் எல்லாமே சுத்தமாகத் சமைக்கப்படுகிறது.

மற்றவர்: எப்படிச் சொல்லுகிருய்?

ஒருவர்: தேங்காய்ப் பூவைக்கூட நன்ருகக் கழுவிப் பாலெடுத்து விட்டுத்தான் சம்பல் அரைக்கிருர்கள். -சண்-

# கணவன் ஆசையுடன் வாங்கிய சேலை--

(5ஆம் பக்க தொடர்ச்சி)

பார்த்துவிட்டு 'பிடிக்கவில்லை' என்று சொன்ஞல் அவர்களுடைய முகம் போகிற போக்கைப் பார்க்கவேண்டுமே. 'இவர் தான் சேலை வாங்கப்போகிற ஆளா' என்பதுபோலிருக்கும் அவர்களது முகபாவம்.

கதைதலைய வளர்ப்பானேன், நான் சேலையை வாங்கிக்கொண்டு, உலகசாதனை ஒன்றை நிலைநாட்டிவிட்டு வருகின்ற பாவனையுடன் அதை மனைவியிடம் பக்குவமாக ஒப்படைத்தேன். அவளின் முகம். புடைவையைப் பார்த்துவிட்டுப் 'பிடிக்கவில்லை' என்று வெளியேறும் ஆண்களைப் பார்க்கும் கடைக்காரரின் முகத்தைப்போலாயிற்று, 'சொன்னல் கேட்டால்தானே, நான் எதிர்பார்த்ததுபோலவே நடந்துவிட்டது.' என்ருள்.

இப்படி ஏதாவது சொல்ல வேண்டும் என்றே எதிர்பார்த்திருப்பாள். ஆனல் உண்மையில் சேலை அவருக்கு நன்ருகப் பிடித்திருக்கலாம். அதனல் 'மனச்சாட்சியைத்தொட்டுச்சொல்லு பார்க்கலாம்' என்றேன்.

''மனச்சாட்சியும், மண்ணுங்கட்டியும், இதைக் கொடுத்துவிட்டு காசைத் திரும்ப வாங்கப்பாருங்கள், இல்லாவிட்டால் வேறு சேலை மாற்றிஎடுக்க முடியுமா என்று விசாரித்து வாருங்கள்'' என்ருள்.

''உந்த வேலைகள் தான் என்னுடைய சரித்திரத்திலேயே கிடையாதே'' என்றேன். சில விநாடி மௌனத்தின் பின் 'அப்படியானல் உனக்கு உண்மையாகவே இது பிடிக்கவில்லைத்தானு? என்றும் கேட்டேன்.

உண்மையில்லாமல் சும்மா உங்களுடன் விளையாடுகிறேனு? இதுக்குப் போய் எவ்வளவை அளந்தீர்கள்?'' என்ருள்.

'அவளுக்கேன் விலையைப்பற்றிய விசாரணைகள். ஒருவேளை அந்தக் கோணத்திலிருந்தும் என் மீது பாணம்தொடுக்க முற்படுகிருளோ' என்று நினைத்தேன். கொடுத்த விலையைவிட பத்துருபா குறைத்துச்சொன்னேன். அதற்கே பதறிப்போய் 'பகற்கொள்ளை - நல்லா ஏமாந்துவிட்டீர்கள்' என்ருள்'

நான் தொடர்ந்தேன். 'உதவாது என்ருல் இந்தச் சேலையை அவர்கள் எதற்காக விற்பனைக்கு வைக்கவேண்டும்? யாராவது வாங்குவார்கள் என்றுதானே வைத்திருந்தார்கள்.'

நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் சொன்ஞள். 'அதுதான் நீங்கள் இடைத்து விட்டீர்களே. இது கூடாது என்பதல்ல. ஐந்து ஆண்டுகளுக்குமுன் என்ருல் இதுதான் பாஷன். இப்போ இது அவுட்-ஒப்-பாஷன்.''

''இதைக் கொண்டு போய் அப்படியே அடிப் பெட்டிக்குள் வை. கூடவே பூச்சி கிச்சி வெட்டாமல் பூச்சி உருண்டையும் மறவாமற் போட்டு வைக்கவேணும். ஐந்து ஆண்டுகளின் பின்னல் மீண்டும் இந்தப் பாஷன் திரும்பிவரலாம். அப்போது இந்தச் சேலைக்கு ஏகப்பட்ட கிராக்கி உயரலாம். எடுத்துக் கட்டினல் ஐந்து ஆண்டுகளுக்குமுன் நீ எப்படி இருந்தாயோ அப்படி வடிவாயிருப்பாய்'

—இதைச் சொல்லிவிட்டு நான் சரித்திர நாயகனுக்குரிய கெம்பீரத்துடன் - மேற்கொண்டு பேச்சை வளர்க்க விரும்பாதவனுக வீட்டைவிட்டு வெளியே நடந்தேன். என்ன இருந்தாலும் சரித்திர நாயகனுக்கு வெளியேறியும் பலவேலைகள் இருக்குமல்லவா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமி சிவானந்தர் சிறப்பு மலர்"
மில்க்வைற் செய்தி - இதழ் - 140
20 மில்க்வைற் நீலசோப் அல்லது
5 பார்சோப் அல்லது
5 சுப்பமில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பி சுவாமி சிவானந்தரின் சிறப்புமலர்
ஒல்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

01 - 08 - 1987 சனிக்கிழமை



நல்லூரில் சகாயவிற்பனை
நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூபா 15/-க்கு சவர்க்காரம் வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், கீரை விதைகளும் வாய்ப்பாடு மட்டையும், முருசன்ஸ்ரிக்கரும் எமது வெளியீடுகளும் இனமாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து சிறந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


## கூச்சல், குழப்பத்தில் முடிவடைந்த சந்திப்பு

### ஹர்கீர்த்சிங்கின் வானைச் சூழ்ந்த மக்கள் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 1

இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த் சிங்கும் ஏனைய இந்திய அதிகாரிகளும் தெல்லிப்பளைச் சந்தியில் நேற்று மக்களுடன் நடத்திய சந்திப்புபெரும் கூச்சல், குழப்பத்துடன் முடிவுற்றது.

மிகுந்த சிக்கலுக்கு மத்தியில் இந்தியப் படையினர் காங்கேசன் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

யாழ் மாவட்டப் புலிகளின் தளபதி குமரப்பாவின் அனுமதியுடன் தெல்லிப்பளைச் சந்தி வரை வந்த இந்திய இராணுவத்தினரை மக்கள் சூழ்ந்து கொண்டனர்.

"தலைவர் பிரபாவை எங்களிடம் ஒப்படையுங்கள்" என்று அவர்கள் ஒருமித்த குரலில் கோஷமிட்டனர்.

அவர்கள் மத்தியில் இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த் சிங் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அந்த உரையை மற்றொரு இந்திய அதிகாரி தமிழில் மொழிபெயர்த்தார்.

"நாங்கள் உங்கள் நன்மைக்கே வந்திருக்கின்றோம். நீங்கள் வீடுகளில் சாந்தி, சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றுடன் வாழ வழி செய்வதே எங்கள் நோக்கம்.

"உங்களுக்கு எதிராக வேட்டுகள் தீர்க்கப்படாமல் பார்த்துக் கொள்வதே எமது கடமை.

இலங்கை இராணுவம் மே 26ஆம் திகதி நிலைகளுக்குத் திரும்ப வேண்டும் என உங்கள் தலைவர் பிரபா நிபந்தனை விதித்திருக்கின்றார் அந்த நிபந்தனையைச் செயற்படுத்துவதிலேயே நாம் கவனமாக இருப்போம்.

தலைவர் பிரபாவை இங்கு அழைத்து வருவதற்கு நாம் தேவையான ஏற்பாடுகளைச் செய்வோம்.

அவர் இன்னும் சில நாட்களில் வருவார்.

— இப்படி ஹர்கீத்சிங் கூறியபோது மக்கள் பல தடவைகள் குறுக்கிட்டு, கேள்வி எழுப்பிக் கூச்சலிட்டனர். பலர் உணர்ச்சி வசப்பட்டுக் காணப்பட்டனர்.

"இதுவரை காலமும் சிங்கள இராணுவம் காடைத்தனம் புரிந்த போது எம்மைக் காப்பாற்றியது போராளிகள் தான்.

"அவர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்காதீர்"

—இப்படி மக்கள் ஒரே குரலில் சத்தமிட்டனர்.

"உங்கள் உணர்ச்சிகளை நாங்கள் மதிக்கிறோம்.

"ஆயுதம் உங்களிடமிருந்தால் சமாதானம் நிலவ முடியாது. தொடர்ந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

"இன்று உங்கள் மீது விழும் சூடு நாளை மறக்கப்பட்டு விடும்.

"இன்று நீங்கள் கூறுவது நாளை மறக்கப்பட்டு விடும்.

"நீங்கள் எத்தனை நாட்களுக்கு இப்படி சண்டைக்குள் சிக்கி வாழப் போகிறீர்கள்? எப்படியும் சமாதானம் கண்டாக வேண்டும். அதற்கே நாங்கள் வந்திருக்கின்றோம்

— இப்படி ஹர்கீத்சிங் கூறினார்.

அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

புலிகள் ஒருவாறு சமாளித்து இந்தியப்படையினரை அவர்களது வாகனத்துக்கு அழைத்துச் சென்றனர்.

ஆனால் மக்கள் கூட்டம் குழம்பிய நிலையில் சத்தமிட்டவாறு அவர்களை பின்தொடர்ந்து ஓடிச் சென்றது.

இந்தியப் படையினரின் வானைச் சூழநின்று மக்கள் கூட்டம் கோஷம் எழுப்பிச் சத்தமிட்டது.

பொதுமக்கள் கூட்டத்திலிருந்து தப்புவதற்காக வந்த வழியே ரிவேர்ஸில் வானைச் சாரதி வேகமாகச் செலுத்திச் சென்றார்.

– எனினும் மக்கள் கூட்டம் தெல்லிப்பளை சென்றி நிலைவரை வானைக் கூச்சலிட்டவாறு கலைத்துச் சென்றது.

## இந்தியப் படையினர் பொதுசனத் தொடர்பு நிலையங்களை அமைப்பர்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 1

இந்திய இராணுவத்தினர் வெளியேவந்தவுடன் ஆங்காங்கே பொதுசனத் தொடர்பு நிலையங்களை அமைக்க உள்ளனர்.

இந்த நிலையத்தின் மூலம் கொழும்புக்கோ மற்றும் வேறு எந்த இடங்களுக்கோ உடனடியாகத்தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வசதி செய்து தரப்படும்.

இந்த வசதியைக் கொண்டு நீங்கள் உங்கள் தலைவர் பிரபாகரனுடனும் கூட தொடர்பு கொள்ள முடியும்

– இப்படி இந்திய அமைதிப் படையின் மேஜர் ஜெனரல் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்

(உ - ஒ - 10)



இந்திய அமைதிப்படை ஸ்ரீலங்கா இராணுவம் ஆகியவற்றுடன் காங்கேசன்துறை இராணுவமுகாமில் பேச்சுக்கள் நடத்திய பின்னர் புலிகளின் யாழ் பிராந்திய தளபதி குமரப்பா முகாமிலிருந்து வெளியே வரும் காட்சி குமரப்பாவுக்கு அருகில் கண்ணாடியுடன் வருபவர் இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங்.



காங்கேசன் இராணுவ முகாமுக்கு அருகில் புலிகள் சென்றி அருகே இந்திய, ஸ்ரீலங்கா இராணுவப் படையினர் நின்றபோது எடுக்கப்பட்ட படம்.

## கொழும்பில் இந்திய யுத்தக் கப்பல்கள்

கொழும்பு, ஆகஸ்ட் 1

கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு இந்தியக் கடற்படைக் கப்பல்கள் நங்கூரமிட்டு உள்ளன.

பாக்கு நீரிணையில் கூட்டுரோந்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்தியக்கப்பல்கள் வந்துள்ளன.

இப்படி இந்தியத் தூதர் டிக்ஸிற் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

யாரின் கட்டளையை ஏற்று இந்தியப் படையினர் செயல்படுவது என்பதில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. நேற்று வெள்ளிக்கிழமை காலை செய்தியாளர் மாநாடு ஒன்றை திரு. டிக்ஸிற் நடத்தினார். அப்போது அவர் சொன்னதாவது;

யாழ்ப்பாணத்தில் மூவாயிரம் இந்தியத் துருப்புக்கள் உள்ளன.

அத்துருப்புக்கள் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர யாழ்ப்பாணத்துக்குள் நகரத் தொடங்கி உள்ளன.

இலங்கையின் முப்படைகளின் பிரதம தளகர்த்தரான ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ஆணைக்குட்பட்டவர்களாக இந்தியத் துருப்புக்கள் செயற்படுவர்:

இப்படி இந்தியத் தூதர் டிக்ஸிற் தெரிவித்தார். (இ-எ)

### ஆயுதங்களை--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வும், ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்கும் பணியில் உதவவும் பணியாற்றும் எனக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (அ-ஒ)

### மக்கள் வழி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லும் ஏராளமான பொது மக்கள் போராளிகளின் சென்றி நிலைகளுக்கு அருகில் மறியல் செய்தனர்.

#### முள்ளியில்

முள்ளி முகாமிற்கு அண்மையில் மக்கள் வீதி மறிப்புப் போராட்டம் செய்தனர்.

முள்ளியில் இந்திய இராணுவம் தென்மராட்சிப் பகுதிக்குள் செல்லாதவாறு ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை இறந்த போராளிகளின் படங்கள், புலிக்கொடி போன்றவற்றை ஏந்தியவாறு வழி மறிப்புப் போராட்டம் செய்தனர்.

நண்பகல் 12 00மணியளவில் முள்ளிச் சந்தி வரை இந்திய ஜீப் வண்டியில் வந்த இந்திய சிப்பாய்கள் முள்ளிவரை வரைபடங்கள் சகிதமாக வந்து திருப்பி நெல்லியடிக்குச் சென்றார்கள்.

#### அச்சுவேலியில்

நேற்று அச்சுவேலியை நோக்கி வந்த இந்திய இராணுவ வீரர்கள் அணி அச்சு நகர் சவக்காலைக்கு அருகில் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களினால் முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தப்பட்டது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இந்திய இராணுவ வீரர்கள் 15 வாகனங்களில் பெரும் எண்ணிக்கையில் அச்சுவேலியை நோக்கி சங்கானை—அச்சுவேலி வீதி வழியாக காலை 10 மணியளவில் வந்தனர்.

அதிகாலை தொடக்கம் கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் அமர்ந்திருந்தனர். 10 மணியளவில் வந்த இராணுவ வாகனங்கள் மறியல் போராட்டத்தால் முன்னேற முடியாமல் மாலை 5 மணியளவில் திரும்பின

(அ-1-11-68-160)


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ அவுஸ்திரேலியா
நாட்டிற்கு விசா, பிரயாணச்சீட்டு
உடனடியாக ஒழுங்கு செய்துதரப்படும்

★ சிங்கப்பூரில் கட்டிடக் கூலி வேலை

★ சிங்கப்பூரில் பணிப்பெண்கள்
உடன் தேவை

● நேரில் தொடர்பு கொள்ளவும் ●

★ பாஸ்போட் ★ பொண்ட்
★ பிரயாணச் சீட்டுக்கள் ★ இந்தியன்விசா
செய்து கொடுக்கப்படும்.

## நிப்பொன் ரெலி ரவல்ஸ்

2 G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


178 ஆம் நாள் நன்றி நவிலலும்

### அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 06 - 08 - 1959 —★— உதிர்வு: 11 - 02 - 1987

பாவற்குளம் (Unit 4) மகாவித்தியாலய ஆசிரியையும், பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரி (கோப்பாய்) விவசாயபீட இரண்டாம் வருட ஆசிரிய மாணவியுமான,

திருமதி
**மலராசினி கமலநாதன்**
(மல்லிகா)

11 - 02 - 1987 இல் பரந்தனில் அகால மரணமடைந்த திருமதி. மலராசினி கமலநாதனின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (07 - 08 - 1987) நயினாதீவு இல்லத்தில் நடைபெற இருப்பதால் கிரியைகளிலும் அன்றைய தினம் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல உதவி செய்தவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வே. கமலநாதனும் (கணவர்),
உறவினர்களும்.

No. 23, U.C. குவாட்டஸ்,
மன்னார் வீதி,
வவுனியா.

2-ம் வட்டாரம்,
நயினாதீவு.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

மண்ணில்: 1926 - 05 - 15
விண்ணில்: 1987 - 07 - 02

ஊனாய் உயிராய் எம்மோடு
தேனாய் இனிக்க நீ வாழ்ந்தாய்
தெய்வ மாகவே காத்தாய்;
தெய்வ மானாய்; உன்ஆன்மா,
தெய்வக் கழலில் சேர்கவே!!

01 - 08 - 1987 சனி காலை 8.00மணிக்கு எம் இல்லத்தில் நடைபெறும் எம் குல விளக்கு திருமதி வே. சின்னப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் சபண்டீகரணத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி வேண்டுகின்றோம்!

கணவன்:- திரு. வை. வேலுப்பிள்ளை,
மனைவி தேவமலர்
(யாழ். போதனா வைத்தியசாலை)
பிள்ளைகள்:- திரு. வே முத்துலிங்கம்
(அச்சுவேலி தேவி அரிசி ஆலை)
திருமதி. பரமகுரு திரவியம்
(1378) திருமதி அழகரத்தினம் சிவபாக்கியம்


வியாபாரம் பெருக ★
★ விளம்பரம் செய்க



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 01-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 393/2 Navalar Road, Jaffna on Saturday August 01. 19..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org